விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 164 வள்ளுவர் ஆண்டு 2057 வைகாசி 18 திங்கட்கிழமை (01.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

மேலும் ஒரு மணி நேரம்

## நீடிக்கப்பட்ட பலாலி வீதியூடான போக்குவரத்து

(யாழ்ப்பாணம்)

பலாலி உயர்பாதுகாப்பு வலயமூடான பலாலி வீதியின் போக்குவரத்து மேலும் ஒரு மணி நேரம் நீடிக்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

அதன் பிரகாரம் பலாலி வீதியின் குறித்த பகுதியானது பொதுமக்கள் பயன்பாட்டிற்காக காலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை திறக்கப்பட்டிருக்கும் 15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக்கப்பட்டு இன்று 45 ஆண்டுகள்



(யாழ்ப்பாணம்)

தமிழ் இனத்தின் பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றாகத் திகழ்ந்த இலங்கையின் யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த 'பொது சன நூலகம்' சிங்களப் பேரினவாதிகளால் திட்டமிட்டு எரிக்கப்பட்டு இன்றோடு 45 ஆண்டுகள் ஆகின்றன. 02ஆம் பக்கம் பார்க்க


# நாட்டில் மீண்டும் பாரிய பொருளாதார ஆபத்து ஏற்படும்

## எச்சரிக்கிறார் ரணில்

நாடு மீண்டும் பாரியபொருளாதார ஆபத்தை நோக்கி நகர்கிறது. வெளிநாட்டு நாணயக் கையிருப்புப் பற்றாக்குறை என்பது நாட்டின் வருமான வீழ்ச்சியைக் காட்டுவதாகும். இதற்கு விரைவாக தீர்வு காணாவிட்டால் நாடு பேரழிவைச் சந்திக்கும்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)



இரண்டு நாட்களுக்கு

## ஒருவழிப் பாதையாக மாறும் ஆடியபாதம் வீதி

(கொக்குவில்)

யாழ்ப்பாணம் - திருநெல்வேலிச் சந்தி ஆடியபாதம் வீதியின் புனரமைப்புப் பணிகள் இன்று திங்கட்கிழமை (01) ஆரம்பமாகவுள்ள நிலையில் திருநெல்வேலி 15ஆம் பக்கம் பார்க்க

எழுவைதீவு, அனலைதீவு

## படகுச்சேவை நேரங்கள் இன்று முதல் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

எழுவைதீவு மற்றும் அனலைதீவுக்கான படகுச்சேவைகள் இடம்பெறும் நேரம் இன்று முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேச செய 15ஆம் பக்கம் பார்க்க

## வற்றாப்பளைத் தாயாரின் பெரும்பொங்கல் இன்று



02ஆம் பக்கம் பார்க்க

செம்மணி மனிதப்புதைகுழி

## அகழ்வுப் பணிகள் இன்று மீள ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப்புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளின் இரண்டாம் பாக அகழ்வு பணிகள் இன்றைய தினம் திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

செம்மணி மனிதப்புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் 15ஆம் பக்கம் பார்க்க

## பேருந்துக் கட்டணத்தை உயர்த்தப் போவதில்லை

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று முன்தினம் (30) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் டீசல் விலையை உயர்த்திய போதிலும், பேருந்து கட்டணங்களில் எந்தவொரு திருத்தமும் மேற்கொள்ளப்படமாட்டாது எனத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (NTC) 02ஆம் பக்கம் பார்க்க

பருத்தித்துறைக் கடலில் மாயமான

## மீனவர்களைத் தேட இந்தியாவின் உதவியை நாடியது அரசு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறைக் கடலிலிருந்து மீன்பிடிக்கச் சென்று காணாமல்போன நான்கு மீனவர்களைத் தேடுவதற்கு இந்தியாவின் உதவியை நாடியுள்ள அதேவேளை, சர்வதேச கடலில் தேடுவதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளதாகக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்து 15ஆம் பக்கம் பார்க்க

மோ.சைக்கிள் விபத்து

## குருநகரில் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் மவுண்ட் ஹாமல் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது.

போக்குவரத்து விதிகளை மீறி 02ஆம் பக்கம் பார்க்க

## தையிட்டியில் புகைப்படம் எடுத்தவர்களுக்குப் பிணை

(மல்லாகம்)

தையிட்டி விகாரை பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடி புகைப்படங்களை எடுத்த குற்றச்சாட்டில் கைதான இரு இளைஞர்களையும் தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான ஆள் பிணையில் மல்லாகம் நீதிமன்றம் விடுவித்துள்ளது.

அத்துடன் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் பலாலி பொலிஸ் நிலையத்திற்கு சென்று கையெழுத்திடுகின்ற நிபந்தனையும் மன்று விதித் 15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது ஒலிக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப்...

இலங்கையின் முதலாவது மாவட்ட சபைத் தேர்தல்கள் 1981 ஜூன் 4 அன்று நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கையின் பல இடங்களிலிருந்து பொலிஸார் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

1981 மே 31 அன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் நடந்து கொண்டிருந்த போது, அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதைத் தொடர்ந்து அங்கு வன்முறை வெடித்தது. அன்றிரவு யாழ்ப்பாணத்தின் பிரபல வணிக நிறுவனங்கள், கடைகள் என அனைத்தும் தீயிட்டு கொளுத்தப்பட்டன.

அன்று கொளுத்தப்பட்ட வன்முறைத் தீ மறுநாளும் கொழுந்துவிட்டு எரிந்தது. ஜூன் முதலாம் திகதி இரவு யாழ்ப்பாணத்திலிருந்த ஈழநாடு தினசரி அலுவலகமும் அதற்கு அருகிலிருந்த கடைகள் பலவும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. அன்று முழுவதும் நிலவிய பதற்றச் சூழலை இந்தச் சம்பவம் மேலும் தீவிரப்படுத்தியது. அதைத் தொடர்ந்து தான் அந்த வரலாற்றுக் கொடுமை அரங்கேறியது. ஆம், சிங்களப் பேரினவாத கும்பல் ஒன்று யாழ்ப்பாண பொதுசன நூலகத்தைத் திட்டமிட்டு கொளுத்தியது. தமிழ்ப் பண்பாட்டின் ஒரு பகுதி திரும்பப் பெற முடியாத வகையில் எரிந்து சாம்பலாகிப் போனது.

இருபதாம் நூற்றாண்டின் இன, பண்பாட்டு அழிப்புகளில் ஒரு மிகப்பெரும் வன்முறையாகக் கருதப்படும் யாழ்ப்பாண நூலக எரிப்பு நடந்து இன்றோடு 45 ஆண்டுகள் ஆகின்றன!

1930களில் யாழ்ப்பாணத்தின் முக்கிய பிரமுகர்களில் ஒருவராகத் திகழ்ந்த கே.எம். செல்லப்பாவின் மனதில் உதித்த எண்ணம்தான் யாழ்ப்பாண பொது நூலகத்துக்கான அடிப்படை. தன்னுடைய சொந்த சேகரிப்பிலிருந்த நூல்களையும் பத்திரிகைகளையும் கொண்டு, 1933 இல் வாடகை நூலகம் ஒன்றைத் தன்னுடைய வீட்டிலிருந்தே தொடங்கிய செல்லப்பா, அதை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்ல விரும்பினார்.

சுமார் 97,000 அரிய நூல்களுடன் தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றாகத் திகழ்ந்த யாழ்ப்பாண பொது நூலகம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அறிவுச் சமூகத்தால் வெகுவாகப் பயன்படுத்தப்பட்டுப் போற்றப்பட்டது. அதைவிட முக்கியமாகத் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு வெளியாக யாழ்.நூலகம் விளங்கியது.

இத்தகைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, ஓர் இனத்தின் பண்பாட்டு அடையாளமாகத் திகழ்ந்த நூலகத்தைத்தான் சிங்களப் பேரினவாதிகள் திட்டமிட்டு அழித்தனர். யாழ்ப்பாணம் நூலக எரிப்பு என்பது ஒரு தனிச் சம்பவமல்ல. அது இலங்கைத் தமிழர் பிரச்சினையில், தமிழர்களை உளவியல் ரீதியாக அடுத்த கட்டத்துக்கு நகர்த்திய ஒரு வரலாற்று நிகழ்வு எனலாம். (ந-7)

## கடும் சீற்றத்துடன் கடற்பரப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவிலிருந்து காங்கேசன்துறை, மன்னார் ஊடாக சிலாபம் வரையான மற்றும் காலியிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகள் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ந-7)








கிறீன் லேயர் அமைப்பினால் நேற்று முன்தினம் (30) யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக மரக்கன்றுகள் நாட்டும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. அதனைப் படங்களில் காணலாம்.

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27 - 04 - 1935 | 31 - 05 - 2026 |

### கார்த்திகேசு கோபாலசிங்கம் (இரத்தினம்)

கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கோபாலசிங்கம் (இரத்தினம்) அவர்கள் நேற்று (31.05.2026) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் மருதவாணர் அவர்களின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மருமகனும் ஜெயலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும் சிவநேசன் (ஓய்வுபெற்ற நீதிமன்ற ஊழியர்), காலஞ்சென்றவர்களான சிவபாலன், பாலமுரளி மற்றும் இந்திரவதனா (வதனா), ஜனார்த்தனி, ஜனார்த்தனன் (மின்சார சபை ஊழியர் - சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சிவகுரு, சிவபாக்கியம், யோகராசா, சின்னராசா, கோபாலகிருஸ்ணன், கலாமதி மற்றும் சண்முகராஜா, அருளானந்தம், நகுலேஸ்வரி, சிவசோதி ஆகியோரின் மைத்துனரும் புனிதகுமாரி, விக்னேஸ்வரி, சர்மிளா (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமனாரும் கௌதமன், கௌதமி, ஹரிசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 01.06.2026 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் பிற்பகல் 02.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 04.00 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**இல.3, ஸ்ரான்லி கல்லூரி ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.** (7757)

தகவல் :
குடும்பத்தினர்

## வற்றாப்பளைத்...

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வைகாசிப் பெரும் பொங்கல் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

பொங்கல் நிகழ்வினை முன்னிட்டு பக்தர்களுக்குத் தேயைான சகல ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கண்ணகி அம்மனை வழிபட வரும் பக்தர்களுக்கான விசேட நடைமுறையும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசல் மற்றும் தாமதங்களை குறைக்கும் நோக்கில் போக்குவரத்துத் திட்டங்களில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் சில வீதிகள் ஒருவழிப் பாதைகளாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாங்குளம் வீதியூடாக வருகை தரும் வாகனங்கள் மூன்றாம் கட்டைச் சந்தியினூடக நுழைந்து சந்தியம்மன் கோவில் சந்தி வழியாக வெளியேறும்.

புதுக்குடியிருப்புப் பகுதியிலிருந்து வருகை தரும் வாகனங்கள் வற்றாப்பளை சலூன் சந்தி வழியாகச் சென்று ஒதுக்கப்பட்ட தரிப்பிடங்களைப் பயன்படுத்தி கேப்பாபிலவு வழியாக வெளியேறும்.

அனைத்து வாகனங்களும் போக்குவரத்து அதிகாரிகள் மற்றும் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் வழிகாட்டல்களுக்கிணங்கச் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

அவசர சேவைகளுக்காக, குறிப்பிட்ட காவல்பகுதியில் ஆலயத்தை அண்மித்த பகுதிகளில் சாதாரண வாகனப் போக்குவரத்து இன்று கட்டுப்படுத்தப்படும் என்றுள்ளது. (ந-7)

## மோ.சைக்கிள்...

மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரை போக்குவரத்துப் பொலிஸார் பின்தொடர்ந்துள்ளனர்.

இதன்போது பொலிஸாரிடமிருந்து தப்பிக்கும் நோக்குடன் மோட்டார் சைக்கிளைச் செலுத்திய அவர் குருநகர் மவுண்ட்ஹாமல் சந்திப் பகுதியைக் கடக்க முற்பட்ட நிலையில், வீதியின் மறுபுற மூடாக பயணித்தவரது மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

விபத்தில் படுகாயமடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ந-7,104)

## பேருந்துக்...

தெரிவித்துள்ளது.

லங்கா ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 15 ரூபாயினாலும், சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 20 ரூபாயினாலும் அதிகரிக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனம் நடவடிக்கை எடுத்திருந்தது.

இதற்கிடையில், எரிபொருள் விலை உயர்த்தப்பட்டதையடுத்து, ஓர் இடைக்காலப் பேருந்து கட்டணத் திருத்தத்தை மேற்கொள்ளுமாறு லங்கா தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

எனினும் பேருந்துக் கட்டணத்தில் மாற்றம் செய்யப்படாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முச்சக்கரவண்டி கட்டணங்களை அதிகரிக்க தீர்மானம்!



(கொழும்பு)

எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து முச்சக்கர வண்டி கட்டணங்களையும் உயர்த்துவதற்கு எதிர்பார்ப்பதாக தேசிய ஒருங்கிணைந்த முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் தொழிலதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, கட்டண மீற்றர்களைப் பயன்படுத்தும் முச்சக்கர வண்டிகளுக்கான முதலாவது கிலோ மீற்றர் கட்டணத்தை 130 ரூபாயாக உயர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் முதன்மைச் செயலாளர் எல். ரோஹண பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பான முன்மொழிவு மேல் மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் விலைக் கட்டுப்பாட்டுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

அண்மையில் பெற்றோல் விலை மொத்தமாக 36 ரூபாயால் அதிகரித்துள்ளதுடன், கிரீஸ், இன்ஜின் ஒயில் மற்றும் உதிரிப்பாகங்களின் விலைகளும் உயர்ந்துள்ளதால் கட்டணத் திருத்தம் அவசியமாகியுள்ளது என சங்கம் வலியுறுத்தியுள்ளது. (8)

# உலகளாவிய ரீதியில் வரலாறு காணாத வெப்பம்

## உலக வானிலை அமைப்புகள் எச்சரிக்கை

**(கொழும்பு)............ அடுத்த ஐந்து ஆண்டுகளில் உலகளாவிய சராசரி வெப்பநிலை முன்னெப்போதும் இல்லாத வகையில் உயரக்கூடும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் உலக வானிலை அமைப்பு மற்றும் பிரித்தானிய வானிலை ஆய்வு மையம் என்பன இணைந்து வெளியிட்டுள்ள புதிய அறிக்கையொன்றில் எச்சரித்துள்ளன.**

WORLD METEOROLOGICAL ORGANIZATION

குறித்த அமைப்புக்களின் நடப்பாண்டு அறிக்கையின்படி, உலகளாவிய சராசரி வெப்பநிலை, தொழிற்துறை புரட்சிக்கு முந்தைய (1850-1900) காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 1.3°C முதல் 1.9°C வரையிலான வரம்பில் அதிகரிக்கக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அடுத்த 5 குளிர்காலங்களில் வட அரைக்கோளத்தில் (Northern Hemisphere) அதிக மழைப்பொழிவுடனான வானிலை நிலவக்கூடும் என கணிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, மே மாதம் முதல் செப்ரெம்பர் வரையிலான காலப்பகுதியில் வடக்கு ஐரோப்பா, அலஸ்கா மற்றும் சைபீரியா போன்ற பிராந்தியங்களில் கடுமையான மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதுடன், இதே காலப்பகுதியில் அமேசன் பிராந்தியத்தில் கடுமையான வறண்ட வானிலை நிலவக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த ஆண்டின் குளிர்காலத்தில் மிகவும் பலத்த "எல் நினோ" காலநிலை நிலைமை ஏற்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

பசுபிக் பெருங்கடல் வெப்பமடைவதால் உருவாகும் இந்த நிலைமை 2027ஆம் ஆண்டு வரை நீடிக்கக்கூடும் எனவும், இதனால் உலகளாவிய வெப்பநிலை வரலாறு காணாத அளவில் உயரக்கூடும் என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-8)

## பொறுப்பற்ற பெற்றோரால் குழந்தை பரிதாபமாக உயிரிழப்பு

(அநுராதபுரம்)

அநுராதபுரம், கெக்கிராவை பிரதேசத்தில் பெற்றோருடன் கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த இரண்டு வயது ஆண் குழந்தை ஒன்று, எதிர்பாராத விதமாகக் கட்டிலில் இருந்து தவறி கீழே விழுந்து பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

இந்தத் துயரச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை வேளையில் இடம் பெற்றுள்ளது.

மேற்படி குழந்தை பெற்றோருடன் கட்டிலில் நித்திரையில் இருந்துள்ளது. இதன்போது, குழந்தை திடீரெனக் கட்டிலில் இருந்து உருண்டு அருகில் இருந்த தரைப்பகுதியில் தவறி விழுந்துள்ளது.



இதில் அக்குழந்தையின் தலைப் பகுதியில் கடுமையான காயம் ஏற்பட்டுள்ளதுடன், குழந்தை உடனடியாக அவ்விடத்திலேயே மயக்கமடைந்துள்ளது.

குழந்தை மயக்கமடைந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்த பெற்றோர், உடனடியாக அக்குழந்தையை மீட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

எனினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்னரே குழந்தை பரிதாபமாக உயிரிழந்துவிட்டது என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8)

## லொறி- மோட்டார் சைக்கிள் விபத்து- இருவர் படுகாயம்

(கொழும்பு)

புத்தளம் - மொனராகலை பகுதியில் மோட்டார் சைக்கிளொன்றும் சிறிய லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் புத்தள பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், அவர்களில் பலத்த காயமடைந்த ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலைக்குமாற்றப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8)



வல்வெட்டி வேவில் வீரகத்தி விக்னேஸ்வர சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை பக்தி பூர்வமாக இடம் பெற்றது.

## திருகோணமலை துறைமுகத்தில் ஒரே நேரத்தில் 3 கப்பல்கள் நங்கூரம்!





திருகோணமலை துறைமுகத்தின் Ashroff Jetty அதன் வரலாற்றிலேயே முதன்முறையாக ஒரே நேரத்தில் மூன்று கப்பல்கள் நங்கூரமிட்டு தங்களது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளன.

மன்னார் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்திற்காக 5 காற்று மின் கோபுரங்களை ஏற்றிவந்த 'AAL BANGKOK' கப்பல், Ashroff Jettyயின் ஒரு பகுதியில் தனது இறக்குதல் பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

அதேவேளை, Ashroff Jettyயின் மற்றுமொரு பகுதியில் டுபாயில் இருந்து மறு ஏற்றுமதிக்காக கொண்டுவரப்பட்ட 17,000 தொன் கட்டுமான இரும்பு கம்பிகளை இறக்கும் பணிகளில் 'HAI LONG 1' என்ற கப்பல் ஈடுபட்டுள்ளது.

அத்துடன், சீமெந்து நிறுவனத்திற்காக இந்தோனேசியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட 55,000 தொன் நிலக்கரியை தரையிறக்கும் பணிகள் 'UNIWELL' கப்பல் மூலம் Ashroff Jettyயின் எஞ்சிய பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

திருகோணமலை துறைமுகத்தில் ஒரே நேரத்தில் இவ்வாறு மூன்று கப்பல்கள் தங்களது செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பது இதுவே முதல் முறை என துறைமுக அதிகாரசபையின் முகாமையாளர் சரத்குமார் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த செயற்பாடுகள் மூலம் 300 மில்லியன் ரூபாவிற்கும் அதிக வருமானம் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 'கிங்' விராட் ஹோலி ஆட்டம் பெங்களூரு கொண்டாட்டம்

## 2ஆவது முறையாக கிண்ணம் வென்று அசத்தல்

ஐ.பி.எல் பைனலில் கோலி 75 ஓட்டங்கள் விளாச, பெங்களூரு அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வென்று, தொடர்ந்து இரண்டாவது முறையாக கிண்ணத்தை கைப் பற்றியது. பட்டிங்கில் சரிந்த குஜராத் அணிக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

வருடந்தோறும் கிரிக்கெட் லீக் தொடர் நடக்கிறது. ஆமதாபாத்தில் உள்ள உலகின் பெரிய மோடி மைதானத்தில் நடந்த பைனலில் "நடப்பு சம்பியன்" பெங்களூரு, குஜராத் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற பெங்களூரு அணித் தலைவர் ரஜத் படிதார், பந்துவீச்சைத் தேர்வு செய்தார்.

**சுப்மன் ஏமாற்றம்:** குஜராத் அணிக்கு அணித் தலைவர் சுப்மன் கில், சாய் சுதர்சன் அதிர்ச்சி துவக்கம் கொடுத்தனர். ஹேசல்வுட் மணிக்கு 142 கி.மீ., வேகத்தில் வீசிய பந்தை "புல் ஷாட்" அடிக்க பார்த்தார் சுப்மன் (10). பந்து மேலே பறக்க, மின்னலாய் ஓடி வந்த கப்டன் ரஜத் படிதார், அருமையாக பிடித்தார். அடுத்து புவனேஷ்வர் வீசிய "பவுன்சரில்" சுதர்சன் (12) தடுமாற பந்து "டாப்-எட்ஜ்" ஆகி மேலே சென்றது. இதை கீப்பர் ஜிதேஷ் சர்மா



சென்று பிடிக்க கோலி உள்ளிட்ட பெங்களூரு வீரர்கள் ஆர்ப்பரித்தனர். இத் தொடரில் ஓட்ட மழை பொழிந்த சுப்மன் (732), சுதர்சன் (722) பைனலில் கைவிட குஜராத், 3.4 ஓவர்களில் 26/2 ஓட்டங்கள் எடுத்து தடுமாறியது.

"பவர் பிளே" (1-6 ஓவர்) முடிவில் 45/2 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. ரசிக் சலாம் பந்தில் நிஷாந்த் (20) நடையை கட்ட 8 ஓவரில் 55/3 என நிலைமை மோசமானது. குர்ணால் பாண்ட்யா "சுழலில்" பட்லர் (19 ஓட்., 23 பந்து) சிக்கினார்.

**வோஷிங்டன் அரைச்சதம்:**

குர்ணால் பாண்ட்யா பந்தில் (12.4), குஜராத்தின் முதல் சிக்சரை அர்ஷத் கான் அடித்தார். டபி ஓவரில் (14வது) வாஷிங்டன் 2 பவுண்டரி, அர்ஷத் ஒரு சிக்சர் விளாச, 16 ஓட்டங்கள் கிடைத்தன. அர்ஷத்கான் 15 ஓட்டங்கள் எடுத்தார்.

ரசிக் சலாம் பந்தில் டிவாட்யா (7) ஆட்டமிழந்தார். ஹோல்டர் (7), ரஷித் கான் (7) நிலைக்கவில்லை. தனிநபராக போராடிய தமிழகத்தின் வோஷிங்டன் சுந்தர், வோஷிங்டன், 37 பந்தில் அரைச்சதம் எட்டினார். குஜராத் அணி 20 ஓவரில் 155/8 ஓட்டங்கள் எடுத்தது. வோஷிங்டன் (50, 5X4), ரபாடா (3) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**கோலி "சரவெடி"**

சுலப இலக்கை துரத்திய பெங்களூரு அணிக்கு அனுபவ கோலி, வெங்கடேஷ் ஐயர் அதிரடி துவக்கம் தந்தனர். ரபாடா ஓவரில் வெங்கடேஷ் 4,6,4,4 என விளாச, 18 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. சிராஜ் ஓவரில் கோலி 2 பவுண்டரி அடித்தார். தொடர்ந்து ரபாடா ஓவரில் கோலி 4,4,6,4 என அடித்து நொறுக்க 19 ஓட்டங்கள் கிடைத்தன. சிராஜ் பந்தில் வெங்கடேஷ் (32 ஓட்டங்கள், 16 பந்து) ஆட்டமிழந்தார்.

ரபாடா "வேகத்தில்" தேவ்தத் படிக்கல் (1) ஆட்டமிழந்தார். ரஷித்கான் ஓவரில் (9வது) ரஜத் படிதார் (15), குர்ணால் பாண்ட்யா (1) வெளியேற 91 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து தத்தளித்தது.

இந்த சமயத்தில் அசராமல் ஆடினார் கோலி. 25 பந்துகளில் அரைசதம் எட்டி, "சேஸ் மாஸ்டர்" என்பதை மீண்டும் நிரூபித்தார். டிம் டேவிட் 24 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். அர்ஷத்கான் ஓவரில் கோலி (63 ஓட்டங்கள்) அடித்த பந்தை தாழ்வாக "கேட்ச்" பிடித்தார் சுப்மன் கில். "ரீப்ளே" பார்த்த "டிவி" அம்பயர் அவுட் இல்லை என அறிவித்தார். பின் அர்ஷத்கான் ஓவரில் வரிசையாக ஒரு பவுண்டரி, சிக்சர் அடித்த கோலி, வெற்றியை உறுதி செய்தார். பெங்களூரு அணி 18 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது. (ந-7)

## பொதுநலவாய சதுரங்க போட்டி

## கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவி கஜிஷனா சாதனை

COMMONWEALTH CHESS CHAMPIONSHIP 2026



களுத்துறை, சிட்ரூஸ் ஹோட்டலில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளுக்கிடையில் நடைபெற்ற சதுரங்க போட்டியில் 10 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவி கஜிஷனா தர்ஷன் 3 ஆம் இடத்தை (இந்திய வீரருடன் இணைந்து) பெற்று சாதனை படைத்துள்ளார்.

16 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் கலந்து கொண்ட குறித்த போட்டியில் மொத்தம் 9 போட்டிகளில் விளையாடி கஜிஷனா 6.5 புள்ளிகளுடன் 3 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

இவருக்கான சான்றிதழ் மற்றும் பணப்பரிசு என்பன பொதுநலவாய அமைப்பினால் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

அத்துடன் இச் சிறுமி கடந்த ஆண்டு ஜார்ஜியாவில் நடைபெற்ற உலகக் கிண்ணச் சதுரங்க போட்டியில் 8 வயதுக்குட்பட்டோர் பிரிவில் இலங்கை சார்பாக பங்குபற்றி வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)





யாழ்.இந்துக் கல்லூரியின் 20 வயதிற்குட்பட்ட துடுப்பாட்ட அணி முதன்முறையாக மாகாணமட்ட சம்பியனாகியுள்ளது.



உடுவில் மகளிர் கல்லூரியின் 16 வயதுப்பிரிவு மேசைப்பந்தாட்ட அணி வலயமட்டத்தில் முதலிடத்தைப் பெற்று மாகாணமட்டத்திற்கு தெரிவாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



நல்லூர் சிவன்கோவில் தீர்த்தத் திருவிழா நேற்றைய தினம் பக்தி பூர்வமாக இடம் பெற்றது. (படம்-சிவசாந்தன்)

# வடக்கை முன்னிறுத்தி புதிய மின்கல எரிசக்தி சேமிப்பு திட்டம்


(கொழும்பு) ..........................

**இலங்கையின் முதலாவது வர்த்தக ரீதியிலான மின்கல எரிசக்தி சேமிப்பு கட்டமைப்பு திட்டத்தின் கீழ், மேலும் 6 மின்கல சேமிப்பு கட்டமைப்புகள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.**

160 மெகாவாட் மின் சாரத்தை சேமிக்கும் நோக் குடன் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தின் கீழ், புதி தாக இறக்குமதி செய்யப் பட்டுள்ள கட்டமைப்புகள் வவுனியா, சுன்னாகம், கிளிநொச்சி, மஹவ, அநு ராதபுரம் மற்றும் பொல னறுவை ஆகிய பகுதிகளில் உள்ள துணை மின் நிலை யங்களுக்கு அருகில் நிறுவ ப்படவுள்ளன.

இந்த ஒவ்வொரு கட்டமை ப்பும் பகல் வேளையில் 40 மெகாவாட் வரையான மின் சாரத்தை சேமித்து வைக்கும் திறன் கொண்டவையாகும்.

இரவு வேளையில் மின் சாரத்திற்கான தேவை உச்சமடையும் சந்தர்ப்பங் களில் இந்த அமைப்புகள் மூலம் தலா 10 மெகாவாட்



மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்பில் இணைக்க முடி யும்.

இத்திட்டமானது 40 பில்லியன் ரூபாவிற்கும் அதிக முதலீட்டில் செயற்படுத்த ப்பட்டு வருகிறது. இதன் மூலம் தேசிய மின் கட்டமைப் பின் ஸ்திரத்தன்மை அதிக ரிப்பதுடன், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டை விரி வுபடுத்தவும், நுகர்வோருக்கு குறைந்த செலவில் மின் சாரத்தை வழங்கவும் வழி வகுக்கும்.

தற்போது எரிபொருளைப் பயன்படுத்தி ஒரு அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு சுமார் 115 ரூபா செலவாகிறது. எனினும், புதிய தொழில்நுட்பத்தின் மூலம் இந்தச் செலவை 30 ரூபாவாகக் குறைக்க முடியும் என மதிப்பீடு செய்யப்பட்டு ள்ளது.

எரிபொருள் மூலமான மின் உற்பத்திக்காக மாதா ந்தம் செலவிடப்படும் வெளி நாட்டு அந்நியச் செலாவ ணியில், சுமார் 2.6 மில்லி யன் அமெரிக்க டொலர்களை இந்தத் திட்டத்தின் மூலம் சேமிக்க முடியும் என வலுசக்தி அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (க-8)

# சுற்றுலாத்துறையை மேம்படுத்த மீண்டும் 'பெலவியா' விமானசேவை





(கொழும்பு)

பெலாரஸ் நாட்டின் தேசிய விமானச் சேவை நிறுவன மான "பெலவியா" இலங்கைக் கான தனது நேரடி விமானச் சேவை களை மீண்டும் ஆரம் பிக்கவுள்ளதாக உத்தியோக பூர்வமாக அறிவித்துள் ளது.

சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி முதல் இந்த விசேட விமானச் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள் ளன.

பெலவியா நிறுவ னத்தின் அறிவிப்பின் படி, இந்த விமானச் சேவைகள் வாரம் ஒருமுறை செவ்வா ய்க்கிழமைகளில் மாத் திரம் பரந்த அளவிலான "எயார்பஸ் ஏ330-200" ரக அதி நவீன விமானங் களைப் பயன்படுத்தி முன் னெடுக்கப்படவுள்ளன.

பெலாரஸ் மற்றும் இல ங்கை ஆகிய இரு நாடுகளு க்கும் இடையிலான இந்த நேரடி விமானப் பயணக் காலம் 9.5 மணித் தியால ங்கள் முதல் 10 மணித்தி யாலங்கள் வரை அமை யும் என மதிப்பிடப்பட் டுள்ளது. (8)

# கொலை!



(கொழும்பு)

வெல்லவ, நிக்கதலு பொத்த பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றில் இருந்த பெண் ஒருவர் கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள் ளதுடன், அதே வீட்டில் மற்றொரு நபர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண் டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த வர்கள் 49 வயதுடைய பெண் மற்றும் 40 வயது டைய ஆண் எனவும், அவர் கள் நிக்கதலுபொத்த பிர தேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவருக்கும் இடையே ஏற்பட்ட வாக்கு வாதம் முற்றியதன் கார ணமாக, சம்பந்தப்பட்ட நபர் பெண்ணைக் கூர்மை யான ஆயுதத்தால் தாக்கி யுள்ளதாகவும், பின்னர் அவரும் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் முதற் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8)

# ஆபத்தான சாகசம் செய்த 6 இளைஞர்கள் கைது

(கொழும்பு)

கொழும்பு-நீர்கொழும்பு பிரதான வீதியின் கந்தானை மற்றும் வெலிகம்பிட்டிய இடை ப்பட்ட பகுதியில் ஆபத்தான முறையில் மோட்டார் சைக் கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளை செலுத்திய 6 இளைஞர்கள் கந்தானை பொலிஸாரால் கைது செய்ய ப்பட்டுள்ளனர்.

இந்தச்சம்பவத்தில், ஏனைய வாகனங்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும் சாரதிகளை அச்சுறுத்தும் வகையிலும் இளைஞர்கள் வாகனங்களை இயக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறிப்பாக, வாகனங்களின் முன்சக்கரங்களை வான த்தை நோக்கி உயர்த்திய வாறும் பெரும் சத்தம் எழுப்பியவாறும் பொதுமக் களின் பாதுகாப்பை ஆபத்துக் குள்ளாக்கும் வகையில் அவர் கள் பயணித்ததாக தெரி விக்கப்படுகிறது.

மேலும், கைது செய்ய ப்பட்ட 6 பேரில் 4 பேரிடம் முறையான சாரதி அனு மதிப்பத்திரம் இல்லாததுடன், அவர்கள் பயன்படுத்திய எந்த வொரு வாகனத்திலும் இலக் கத் தகடுகள் பொருத்தப்பட வில்லை என்பதும் விசார ணைகளில் தெரியவந்துள் ளது. சந்தேகநபர்கள் ராகம சட்டவைத்திய அதிகாரியிடம் மருத்துவப் பரிசோதனைக் காக ஆஜர்படுத்தப்பட்டபோது, சம்பவம் இடம்பெற்ற வேளை யில் அவர்கள் போதைப் பொருள் பயன்படுத்தியிருந் தமை உறுதி செய்யப்பட்ட தாகவும் தெரிவிக்கப்பட்டு ள்ளது. இச்சம்பவம் தொடர் பில் கந்தானை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற னர். (8)

# உயர்தர மாணவர்களுக்கான இலவச முன்னோடி செயலமர்வு

(கரணவாய்)

க.பொ.த உயர்தர பரீட் சைக்கு தோற்ற உள்ள மாண வர்களுக்கான இலவச முன் னோடி செயலமர்வு பருத்தி த்துறையில் வேலும்மயிலும் அறக்கட்டையின் ஏற்பாட்டில் அறக்கட்டளை அரங்கில் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்றது.

வேலும்மயிலும் அறக் கட்டளையில் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் பொருளியல் ஆசிரியர் விஷ்வா பொருளியல் பாடம் தொடர்பில் பரீட்சைக்கான தயார்ப்படுத்தல் கருத்துரை களை வழங்கியிருந் தார்.

கால முகாமைத்துவப் பயிற்சி மற்றும் மன அழுத்தத்தை நிர்வகித்தல், கடந்த கால வினாக்களை அணுகு வதற்கும், சிறந்த முறையில் விடை எழுது வதற்குமான ஆலோசனை களும் வழங்கப்பட்டது.

இம்முன்னோடி செய லமர்வில் வடமராட்சி, வலி காமம் மற்றும் யாழ்ப்பாணம் கல்வி வலயங்களுக்கு உட் பட்ட 14 பாடசாலைகளை சேர் ந்த 60 மாணவர்கள் பங்கு பற்றியிருந்தனர். (8-60)








வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் செல்வாபுரம் வீரபத்திரர் ஆலயத்திற்கு பிளாஸ்ரிக் சேகரிப்பான் அண்மையில் வழங்கப்பட்டது. (படம்- மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஓய்வுநிலைப் பேராசிரியர் க.தேவராஜாவின் பவளவிழா கடந்த 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் வீதியில் அமைந்துள்ள விசேட மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விழா நாயகன் அழைத்து வரப்படுவதையும் "தேவாமிர்தம்-4 நூல்" மற்றும் "தேவகானம்" இறுவெட்டு என்பன வெளியிட்டு வைக்கப்படுவதையும் பவளவிழா மலராசிரியர் ஞான.திருக்கேதீஸ்வரன் உரையாற்றுவதையும் விழா நாயகனுக்கு விருது வழங்கி கௌரவிக்கப் படுவதையும் படங்களில் காணலாம்.

# பேருந்து கட்டணங்களை அதிகரிக்க யோசனை

(கொழும்பு)

**எரிபொருள் விலைகள் அதிகரிக்கப் பட்டுள்ளதை அடுத்து, பேருந்து கட்டணங்களில் இடைக்கால திருத்தம் ஒன்றை மேற்கொள்ளுமாறு இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

நேற்று நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, ஆண்டுதோறும் ஜூலை மாதம் மேற்கொள்ளப்படும் வழக்கமான பேருந்து கட்டண திருத்தத்திற்கு முன்னதாக இந்த இடைக்கால திருத்தம் செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

இதன்படி, நாளை முதல் பேரு ந்து கட்டணங்களை 5 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தற்போது காணப்படும் ஆகக்குறைந்த பேருந்து கட்டண த்தை 32 ரூபா அல்லது 33 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து, பேருந்து உரிமை யாளர்கள் தற்போது ஒரு பயணத் திற்கு சுமார் 25 ரூபா நஷ்டத்தி லேயே சேவைகளை முன்னெடுத்து வருவதாகவும் கெமுனு விஜேரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (8)

# மண்மேடு சரிந்து விழுந்ததில் ஒருவர் பரிதாபமாக உயிரிழப்பு

(கொழும்பு)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிளன்டில் தோட்டம் பகுதியில் கட்டடம் ஒன்றிற்கு அருகில் மண்ணை அகற்றி வேலைசெய்து கொண்டிருந்த நபரொருவர் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவத்தின்போது காயமடைந்து, மஸ்கெலியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னரே அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபர் (வயது 41) தனது வீட்டிற்கு அருகில் மற்றுமொரு கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக மண்ணை அகற்றிக் கொண்டிருந்த போதே இந்த சம்பவம் நேர்ந்துள்ளதாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசார ணைகளில் இருந்து தெரியவந்துள் ளது.

மஸ்கெலியா பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வரு கின்றனர். (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 700 | 700 | 700 | 800 | 800 |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 200 | -- | 240 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 300 | 200 | 400 |
| தக்காளி | 450 | 550 | 500 | 500 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 180 | 200 | 140 | 200 |
| கோவா | 250 | 300 | 300 | 260 | 300 |
| கரட் | 350 | 450 | 500 | 350 | 500 |
| பூசணி | 120 | 110 | 100 | 100 | 150 |
| புடோல் | 250 | 250 | 200 | 200 | 350 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 80 | 150 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 300 | 300 | 450 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 250 | -- | 250 |
| பாகற்காய் | 1400 | 2500 | 1000 | 2000 | 1500 |
| வெண்டக்காய் | 300 | 250 | 300 | 270 | 400 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 300 | 300 | 400 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 600 | 400 |
| லீக்ஸ் | 400 | 400 | 500 | 400 | 400 |
| பீற்றூட் | 350 | 500 | 400 | 350 | 600 |
| கறிமிளகாய் | 600 | 600 | 350 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 500 | 800 | 600 | 600 | 1000 |
| போஞ்சி | 600 | 700 | 800 | 600 | 800 |
| கத்தரிதம்புள்ள | 600 | 500 | 400 | -- | 700 |
| கீரை – 1 பிடி | 150 | 120 | 200 | 120 | 150 |
| தேசிக்காய் | 600 | 500 | 400 | 660 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 100 | 120 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 350 | 350 | 400 |
| வெங்காயப்பூ | 650 | 600 | 600 | -- | 800 |
| முள்ளங்கி | -- | 270 | 200 | 160 | 400 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | -- | 60 |
| வல்லாரை | 100 | 70 | 100 | -- | 80 |
| ஈரப்பலா | -- | -- | 150 | -- | 280 |

# முச்சக்கரவண்டி வயலுக்குள் பாய்ந்து விபத்து

(மட்டக்களப்பு)

திருகோணமலை - மட்டக்க ளப்பு பிரதான வீதியில், மூதூர் அமினா வித்தியாலயத்திற்கு அருகில் இடம்பெற்ற முச்சக்கர வண்டி விபத்தில் மூவர் படுகாய மடைந்துள்ளனர்.

அதிவேகமாக பயணித்த முச்சக்கர வண்டி ஒன்று, கட்டுப் பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகில் இருந்த வயல் வெளியில் விபத்துக்குள்ளானது.

விபத்தில் காயமடைந்தவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



இந்த சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை மூதூர் பொலி ஸார் மேற்கொண்டு வருகின்ற னர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநபர் சீனி நுகர்வு இலங்கையில் அதிகரிப்பு

## எச்சரிக்கும் உலக சுகாதார அமைப்பு

**(கொழும்பு)**

**நாட்டில் சீனி நுகர்வு மிகவும் அதிகமாக காணப்படுவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**

ஒரு தனிநபரின் வருடாந்த சீனி நுகர்வு வீதமானது, உலக சுகாதார அமைப்பு பரிந்துரைத்துள்ள அளவை விடவும் கணிசமாக அதிகரித்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு தனிநபர் வருடத்திற்கு 22 முதல் 24 கிலோகிராம் சீனியை 'மட்டுமே நுகர வேண்டும் என உலக சுகாதார அமைப்பினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.



ஆனால், இலங்கையில் ஒரு தனிநபரின் வருடாந்த சீனி நுகர்வு 32 முதல் 34 கிலோகிராம் என்ற மிக உயர்ந்த மட்டத்தில் இருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையின் வருடாந்த சீனி நுகர்வில் 90 சதவீதத்திற்கும் அதிகமான பகுதி இறக்குமதி மூலமாகவே பூர்த்தி செய்யப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கையின் ஒட்டுமொத்த வருடாந்த சீனி நுகர்வு சுமார் 6.5 லட்சம் மெட்ரிக் தொன்களாக காணப்படுகின்றது.

இதில் உள்நாட்டு சீனி உற்பத்தி வெறும் 56 ஆயிரம் மெட்ரிக் தொன்களாக மட்டுமே காணப்படுகிறது.

நாட்டின் சீனி தேவையை இறக்குமதி மூலம் ஈடு செய்வதற்காக, வருடாந்தம் சுமார் 110 பில்லியன் ரூபாய் வரையிலான பெருந்தொகை செலவிடப்படுகிறது.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்தி, உள்நாட்டு சீனி உற்பத்தியை மேம்படுத்துவதற்காக கைத்தொழில் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு அமைச்சு புதியதொரு திட்டத்தை கையில் எடுத்துள்ளது. (8)

# இலங்கைத் தமிழ் பெண் சிற்றூர்தியால் மோதிக் கொலை

## சென்னையில் சம்பவம்

(சென்னை)

இலங்கையைச் சேர்ந்த தமிழ் பெண் ஒருவர் கார் ஏற்றி கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவத்தில் இலங்கையை சேர்ந்த 18 வயதான யான்சி என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில், சென்னை கோயம்பேட்டில் உள்ள ஒரு பாரில் சிலர் மது அருந்திவிட்டு நடனமாடிக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

அப்போது இரு தரப்பினரிடையே திடீரென வாக்குவாதம் ஏற்பட்டு, அது பெரும் மோதலாக மாறியது. நிலைமை கையை மீறிச் சென்றதால், பாரில் இருந்த பாதுகாப்பு பணியாளர்கள் இரு தரப்பையும் சமாதானப்படுத்தி பாரை விட்டு வெளியேற்றினர்.

பாரை விட்டு வெளியே வந்த பிறகும் இரு தரப்பினருக்கும் இடையேயான மோதல் ஓயவில்லை. வீதியில் வைத்து மீண்டும் இரு தரப்பும் கடுமையாக மோதிக்கொண்டனர்.

இந்த மோதலின் உச்சகட்டமாக, ஒரு தரப்பினர் ஆத்திரத்தில் எதிர்தரப்பினர் சென்ற மோட்டார் சைக்கிள் மீது காரை ஏற்றியுள்ளனர். இந்த சம்பவத்தில் யான்சி என்ற பெண் ஒருவர் காரின் அடியில் சிக்கி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.


இவர் இலங்கையைச் சேர்ந்த தமிழ் பெண் என்பது தெரியவந்துள்ளது.

யான்சியுடன் மோட்டார் சைக்கிளில் வந்த ஒரு சிறுமிக்கும் இந்த மோதலில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

அச்சிறுமி தற்போது தீவிர சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து தகவல் அறிந்த கோயம்பேடு பொலிஸார் உடனடியாக விரைந்து வந்து உடலைக் கைப்பற்றினர்.

இந்த கொடூரக் கொலை மற்றும் மோதல் சம்பவம் தொடர்பாக, சந்தேகத்தின் பேரில் ஒருவரைப் பிடித்து பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (3)


## சேவை நலன் பாராட்டு



அரச சேவையில் 27 வருடங்கள் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக அரும்பணியாற்றி 2026.06.01 இன்று ஓய்வுபெற்றுச் செல்லும்

**திருமதி.பத்மாவதி சுகுமார்**

அவர்களின் சேவையினைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் அவரது ஓய்வுகாலம் மகிழ்ச்சிகரமாக அமைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

Best Wishes!

(C-5758)

**ஊழியர் நலன்புரிச்சங்கம், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**

## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற இரத்தினசாமி சாஸ்திரியார் அவர்கள் யாழ்.வருகை, ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, வெளிநாடு செல்லத்தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

(C-5757)

**074 196 4945**

**இல.90, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**


# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-09, கடையிற்சுவாமி வீதியில் அமைந்துள்ள 30,30A எனும் வரி மதிப்பீட்டு இலக்கங்களை கொண்ட ஆதனம் சுந்தரம்பிள்ளை பெண் மங்கையற்கரசி என ஆதனவரிப்பதிவேட்டில் காணப்படுகிறது. இவ்வாதனத்தை அராலி மேற்கைச் சேர்ந்த முத்தையாபிள்ளை செல்லத்துரை பெண் சிதம்பரவல்லி என்பவர் பிரசித்த நொத்தாரிசு S.V.சோமசுந்தரம் முகதாவில் 03.02.1963 ஆம் திகதி 5983 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் நடராசா சுந்தரம்பிள்ளை பெண் மங்கையற்கரசிக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், நீராவியடி, கடையிற்சுவாமி லேன், இலக்கம் 30ஐச் சேர்ந்தவர்களான சுந்தரம்பிள்ளை மணிவண்ணன் மகள் திருமகள், சுந்தரம்பிள்ளை மணிவண்ணன் மகள் சுபாஜினி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு திருமதி.S.சிவபாதம் முகதாவில் 19.04.2015 ஆம் திகதி 7438 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் சுந்தரம்பிள்ளை மணிவண்ணன் கைம்பெண் இராஜராஜேஸ்வரிக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் மேற்குறித்த 5983 ஆம் இலக்க 03.02.1963 ஆம் திகதிய உறுதி மூலம் எங்களின் பிதா காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை மணிவண்ணன் மற்றும் தாயார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை பெண் மங்கையற்கரசியின் பெயரில் நிறைவேறிய சீதன உறுதிப்படி குறித்த மங்கையற்கரசி ஒரே சட்ட முறையான உரித்தாளியான காலஞ்சென்ற மணிவண்ணனின் சட்டமுறையான உரித்தாளியான அவரின் பிள்ளைகளாகிய எங்களை வந்தடைந்த பிதாவழி முதுசமும் ஆட்சியுமானதாகும் என வெளிப்படுத்தியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார் பண்ணைக் கோவிற்பற்று, வண்ணார்பண்ணை கிழக்கிறை.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட பாகம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவு, கிராம சேவையாளர் பிரிவு J/101.

"பெரிய வளவும், ஒல்லைத்தறையும், பருத்திப்புலமும், ஒல்லைத்தறையும்" நிலப்பரப்பு ஆறு (நில.பர 6) இது 13.03.2007 இல் நில அளவையாளர் எஸ். சுப்பரமணியம் அளந்து தயாரித்த 1009 ஆம் இலக்கப் படத்தின்படி நிலப்பரப்பு ஆறு குளி சைபர் தசம் இரண்டு ஏழும் (நில.பர6 குளி 0.27) வீடுகளும், கிணறும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் என 1 ஆம், 2 ஆம், 3 ஆம் துண்டுகளாக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லை

கிழக்கு - சோமசுந்தரம் சுமதியின் ஆதனம்

வடக்கு - விஸ்வநாதனின் உரித்தாளரின் ஆதனம்

மேற்கு - கடைச்சுவாமி ஒழுங்கை

தெற்கு - வீரசிங்கம் யோகேஸ்வரிக்கும், கே.சிவராஜாவுக்கும், கே.சரோஜினிக்கும், கதிரவேலுவின் உரித்தாளருக்கும் உரிய ஆதனங்கள். இதடங்கலும்.

தற்போது இவ்வாதனத்தை சுந்தரம்பிள்ளை மணிவண்ணன் கைம்பெண் இராஜராஜேஸ்வரி என்பவர் தமது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சுந்தரம்பிள்ளை மணிவண்ணன் கைம்பெண் இராஜராஜேஸ்வரி எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர்,**

**யாழ். மாநகரசபை.**

(C-5756)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாரதம்

## உக்ரைன் போர்க்களத்தில் இராணுவ ரோபோக்கள்



(கீவ்)

நீண்டகாலமாக மனிதவளப் பற்றாக்குறையினாலும், சர்வதேச ஆயுத விநியோகத் தாமதங்களினாலும் தவித்து வந்த உக்ரைன், தற்போது தனது போர்க்கள உத்தியை முழுமையாக மாற்றியுள்ளது.

ஆளில்லா வான்வழி ட்ரோன்கள், தரைவழி ரோபோக்கள் மற்றும் தானியங்கி டாங்கிகள் மூலம் உக்ரைன் இராணுவம் ரஷ்யப் படைகளுக்குப் பலத்த முறியடிப்புப் பதிலடிகளை வழங்கிவருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

கணக்கீட்டின்படி, இதுவரை நடத்தப்பட்ட 164 தாக்குதல்களை மனிதர்களைக் கொண்டு நடத்தியிருந்தால், அதற்கு சுமார் 2,300 படைவீரர்கள் தேவைப்பட்டிருப்பார்கள். அத்தகைய நேரடித் தாக்குதல்களில் கிட்டத்தட்ட பாதிக்கும் மேற்பட்ட உக்ரைனிய வீரர்கள் உயிரிழக்கவோ அல்லது படுகாயமடையவோ வாய்ப்பிருந்திருக்கும்.

ஆனால், இந்த நான்கு சக்கர வெடிகுண்டு ரோபோக்களின் பயன்பாட்டினால், ஆயிரத்துக்கும் மேற்பட்ட உக்ரைனிய வீரர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன என உக்ரைன் துணைப் படைப்பிரிவுத் தளபதி தகவல் தெரிவித்துள்ளார். (3)

## இஸ்ரேலின் ஆக்கிர... முறிவின் விளிம்பில் க...



(ஹைரோ)

**காசாவில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் முயற்சிகளை முற்றிலும் சீர்குலைத்துவிடும் என்று எகிப்து எச்சரித்துள்ளது.**

காசாவில் நிலவி வரும் தற்காலிக போர்நிறுத்த ஒப்பந்தம் முறிவடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதால், அதனை மீட்டெடுக்கும் நோக்கில் எகிப்து அரசு அவசர இராஜதந்திர நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.

கடந்த ஒக்டோபர் 2025இல் அமெரிக்காவின் டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்தின் கீழ் கையெழுத்தான அமைதித் திட்டத்தை மீறும் வகையில், காசாவில் இஸ்ரேல் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியை 53 வீதத்திலிருந்து 70வீதமாக விரிவுபடுத்துமாறு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இராணுவத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலும், ஹமாஸ் அமைப்பின் புதிய இராணுவத் தளபதி முகமது ஒடே கொல்லப்பட்டதை உறுதி செய்த இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ், பாலஸ்தீனர்களை காசாவை விட்டு "சுய விருப்பத்தின் பேரில் வெளியேற்றும்" திட்டத்தை மீண்டும் செயற்படுத்தப் போவதாக அறிவித்துள்ளார்.

இத்தகைய நடவடிக்கைகள் பிராந்தியத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி

## இறுதி முடிவு எட்டப்படாமல் முடிந்த ட்ரம்பின் அவசர உயர்மட்டக் கூட்டம்



(வோஷிங்டன்)

ஈரானுடனான தற்காலிகப் போர்நிறுத்தத்தை நீடிப்பது தொடர்பான "இறுதி முடிவை" எடுப்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது உயர்மட்ட ஆலோசகர்களுடன் நடத்திய அவசரக் கூட்டம் எவ்வித உடன்பாடும் எட்டப்படாமல் நிறைவடைந்துள்ளது.

குறித்த இந்த அவசரக் கூட்டம் அமெரிக்க வெள்ளை மாளிகையின் மிகப்பாதுகாப்பான அவசரகால நெருக்கடிகளைக் கையாளும் "சூழ்நிலை அறை"யில் வெள்ளிக்கிழமை இக்கூட்டம் நடைபெற்றதாக பிபிசி செய்திதளம் தகவல் வெளியிட்டுள்ளது.

வியாழக்கிழமையன்று இரு நாடுகளுக்கும் இடையே 60 நாட்களுக்குப் போர்நிறுத்தத்தை நீடிப்பதற்கான ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை கட்டமைப்பு தயார் செய்யப்பட்டிருந்த போதிலும், ட்ரம்பின் கடுமையான நிபந்தனைகள் காரணமாக இறுதி முடிவு பிற்போடப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.


ட்ரம்ப் தனது சமூக ஊடகப் பதிவிலும் கூட்டத்திலும் அணு ஆயுதத் தடை, ஹார்முஸ் நீரிணை திறப்பு, யுரேனியம் ஒப்படைப்பு ஆகிய முக்கிய நிபந்தனைகளை முன்வைத்துள்ளார்.

ட்ரம்பின் இந்த அறிவிப்புகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து ஈரானின் அரச ஊடகமான "பார்ஸ்" செய்திச் சேவை, ட்ரம்பின் கருத்துக்கள் "உண்மையும் பொய்களும் கலந்த ஒரு கலவை" எனத் தெரிவித்துள்ளது.

ஈரானிய வெளியுறவு அமைச்சகத்தின் ஊடகப் பேச்சாளர் இஸ்மாயில் பகாஈ அரச தொலைக்காட்சியில் பேசுகையில், தங்களது அணுசக்தித் திட்டம் முற்றிலும் சிவில் தேவைகளுக்கானது என்றும், அது குறித்து எந்தவொரு பேச்சுவார்த்தையும் நடத்தப்பட மாட்டாது என்றும் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் ஏப்ரல் 8 முதல் நடைமுறையிலுள்ள போர்நிறுத்தத்தின் அடுத்தகட்ட நகர்வு தற்போதைக்கு முட்டுக்கட்டையில் முடிந்துள்ளது. (3)

## போர்க்கால பாலிய...



## ஐ.நா.விற்கான கறு... முதன்முறையாக சேர்க்...

(ஜெருசலேம்)

ஆயுத மோதல்களின் போது பாலியல் வன்முறைகளில் ஈடுபடும் தரப்புகள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை ஆண்டுதோறும் வெளியிடும் கறுப்புப் பட்டியலில் முதன்முறையாக இஸ்ரேல் சேர்க்கப்பட்டுள்ளது.

ஐ.நா பொதுச்செயலாளர் அந்தோனியோ குட்டெரெஸ் சமர்ப்பித்துள்ள அண்மைக் கால அறிக்கையின் அடிப்படையில் இந்த உத்தியோகபூர்வ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காசா மற்றும் மேற்குக்கரை ஆகிய பகுதிகளில் பாலஸ்தீனியர்களுக்கு எதிராக இஸ்ரேலிய தரப்பால் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் மோதல் சார்ந்த பாலியல் வன்முறைகள் குறித்து ஐ.நா விசேட விசாரணை நடத்தியதை தொடர்ந்து இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஐ.நா அறிக்கையின்படி, பாதிக்கப்பட்டவர்கள் கற்பழிப்பு, பாலியல் சித்திரவதை, கட்டாய நிர்வாணப்படுத்துதல் மற்றும் பாலியல் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ...மிப்பு திட்டங்களால் ...காசா போர்நிறுத்தம்!



...யுள்ளன.

பாலஸ்தீனர்களை ரஃபா எல்லை வழியாக எகிப்திற்குள் தள்ளும் எந்தவொரு கட்டாய இடப்பெயர்வுத் திட்டத்தையும் திட்டவட்டமாக நிராகரித்துள்ள எகிப்து, இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண கட்டார், துருக்கி மற்றும் அமெரிக்க அதிகாரிகளுடன் இணைந்து தீவிரமாகச் செயலாற்றி வருகிறது.

அமைதிப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க ஹமாஸ் அமைப்பின் தலைமைப் பேச்சுவார்த்தையாளர் கலீல் அல்-ஹய்யா தலைமையிலான குழுவிற்கு எகிப்து அவசர அழைப்பு விடுத்துள்ளது. அத்துடன், இஸ்ரேலின் இந்த ஆபத்தான போக்கைக் கட்டுப்படுத்துமாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிடமும் எகிப்து கோரிக்கை விடுத்துள்ளது.

இஸ்ரேலின் தொடர் தாக்குதல்களால் கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் 141 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதால், காசாவில் மீண்டும் ஒரு முழு அளவிலான போர் வெடிப்பதைத் தடுக்க எகிப்து தீவிரமாக முயன்று வருகிறது. (3)

# ஆப்கானிஸ்தானில் லொறி கவிழ்ந்து விபத்து




(காபூல்)

கிழக்கு ஆப்கானிஸ்தானில் லொறி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 10 சிறுவர்கள் உட்பட 18 பேர் உயிரிழந்ததாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கு ஆப்கானிஸ்தானின் ஜலாலாபாத்துக்கும் தலைநகர் காபூலுக்கும் இடையிலான வீதியில் 50 இற்கும் மேற்பட்டோரை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த லொறியே விபத்தில் சிக்கியுள்ளது.

இந்த விபத்தில் 10 சிறுவர்கள், 5 பெண்கள், 3 ஆண்கள் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன் 29 பேர் இவ்விபத்தில் சிக்கி காயமடைந்துள்ளதாகவும் அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

ஆப்கானிஸ்தானிலிருந்து புலம் பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் தங்குவதற்கு பாகிஸ்தானில் விதிகள் கடுமையாக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பெரும்பாலான குடும்பங்கள் தங்கள் உடைமைகளுடன் லொறிகளின் ஊடாக பயணத்தை மேற்கொண்டு பாகிஸ்தானை விட்டு வெளியேறுகின்றனர். அவ்வாறு பயணித்த லொறியொன்றே விபத்தில் சிக்கியுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்து இதுவரை 4 இலட்சத்து 47 ஆயிரத்து 400 ஆப்கானிஸ்தான் மக்கள் பாகிஸ்தானை விட்டு வெளியேறியுள்ளதாக கூறப்படுகிறது. (3)




# ...றுப்புப் பட்டியலில் ...க்கப்பட்டது இஸ்ரேல்!

...ட்டுள்ளனர். எனினும், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்வதற்கான கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாக, உண்மையான பாதிப்புகள் இதைவிடப் பலமடங்கு அதிகமாக இருக்கக்கூடும் என ஐ.நா சுட்டிக் காட்டியுள்ளது.

குறித்த இந்த அறிக்கையை தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் இந்த அதிரடி முடிவை இஸ்ரேல் முற்றாக நிராகரித்துள்ளது.

"ஐ.நா.வின் இந்த முடிவு முற்றிலும் அரசியல் உள்நோக்கம் கொண்டது. உண்மைக்குப்புறம்பான இந்த அறிக்கையை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்." எனத் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய அரச அதிகாரிகள் இந்தக் கறுப்புப் பட்டியல் வெளியீட்டைத் தொடர்ந்து, ஐ.நா பொதுச்செயலாளரின் அலுவலகத்துடனான அனைத்துவிதமான ஒத்துழைப்புகளையும் தற்காலிகமாக இடைநிறுத்துவதாக இஸ்ரேல் அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. (3)

# ஒரு ஜோடி மாம்பழத்தின் விலை 3.5 இலட்சம் ரூபாயா?



(டோக்கியோ)

உலகில் மிக அதிக விலைக்கு விற்கப்படும் பழங்களில் ஜப்பானின் "மியாசாகி" மாம்பழம் முதலிடம் வகிக்கின்றது.

ஜப்பானில் ஒரு ஜோடிமியாசாகி மாம்பழங்கள் சுமார் 6 இலட்சம் ஜப்பானிய யென் (இலங்கை பெறுமதியில் 3.5 இலட்சம் ரூபாய்) வரை ஏலத்தில் விற்பனையாகின்றன.

இதன் விசேட அம்சங்கள் மற்றும் வளர்ப்பு முறையே இந்தளவு அதிக விலைக்குக் காரணம் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஜப்பானின் மியாசாகி மாகாணத்தில் விளையும் இந்த மாம்பழம், அதன் தோற்றம் மற்றும் வடிவம் காரணமாக "சூரியனின் முட்டை" என அழைக்கப்படுகின்றது.

சாதாரண மாம்பழங்கள் போலன்றி, இவை மாணிக்கக்கல் போன்ற அடர் சிவப்பு நிறத் தோலைக் கொண்டுள்ளன. நார் இல்லாத, அதிக சாறு நிறைந்த இதன் உட்பகுதி 15 சதவீதத்திற்கும் அதிகமான சர்க்கரை அளவைக் கொண்டுள்ளது.

இவை பச்சை வீட்டு வளர்ப்பு முறையில் வளர்க்கப்படுகின்றன.

பழத்தின் எல்லாப் பக்கங்களிலும் சமமாகச் சூரிய ஒளி படுவதற்காக, மரங்களுக்குக் கீழே பிரதிபலிப்பான்கள் வைக்கப்பட்டு, ஒவ்வொரு பழமும் தனித்தனியாக வலையமைப்பிற்குள் கட்டித் தொங்கவிடப் படுகின்றன.

இந்த நிலையில், 350 கிராமுக்கு அதிக எடை, கீறல்களற்ற முழுமையான சிவப்பு நிறம் கொண்ட சிறந்த பழங்கள் மாத்திரமே ஏலத்திற்குத் தெரிவு செய்யப்படுகின்றன.

தற்போது இந்தியா, தாய்லாந்து, வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிலும் இந்த மாம்பழம் வெற்றிகரமாகப் பயிரிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## மரிக்கொழுந்து

Botanical Name - Artemisia absinthium
Family - Asteraceae

இனிமையான நறுமணத்திற்கும், மருத்துவ குணங்களுக்கும் பெயர் பெற்ற மூலிகையாகும். இதன் நறுமணம் நரம்பு மண்டலத்தை அமைதிப்படுத்துகிறது. மன அழுத்தம், கவலை மற்றும் தூக்கமின்மை போன்ற பிரச்சினைகளை தீர்க்கவல்லது.

இதன் அத்தியாவசிய நறுமண எண்ணெய் (Essential oil) நறுமண சிகிச்சை (Aromatherapy) இல் பயன்படுத்தப்படுகிறது. வயிற்றுப் பொருமல், அஜீரணம் போன்ற பிரச்சினைகளைத் தீர்த்து குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. இது பெண்களின் மாதவிடாய் காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளால் ஹார்மோன் சமநிலையை மீட்டெடுக்கவும், மாதவிடாய்க் காலவலி மற்றும் பிடிப்புகளை நீக்கவும் உதவுகிறது.

நறுமண மலர்கள், இலைகளை பார்த்திருப்போம். ஒரு செடியே நறுமணமாக இருப்பதை பார்த்திருக்கிறோமா? தூரத்தில் இருக்கும் போதே, வாசனை மனதை மயக்கும் மரிக்கொழுந்து! மரிக்கொழுந்து வண்டல் நிலம், கரிசல் நிலம் மற்றும் செம்மண் நிலங்களில் அதிகளவில் வளரும். மிதமான மழை மற்றும் சூரிய ஒளி மரிக்கொழுந்து செடிகளை நன்கு வளர வைக்கும் தன்மை உள்ளவை. ஓராண்டு காலம் வரை இலைகள் மற்றும் தண்டுகள் மூலம், நறுமணப் பயன்கள் தரும் மரிக்கொழுந்து, அடர்த்தியாக நிறைய கிளைகளுடன் வளரும். இது சருமத்தில் தொற்றுக்களால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பு அளிக்கின்றது. உடலிற்கு கெடுதல் செய்யும் வியாதிக் கிருமிகளை அழிக்கக் கூடியது.



தினமும் உறங்கப் போகும் முன்பு, தலையணையின் கீழே, ஒரு கொத்து மரிக்கொழுந்து இலைகளை தண்டுகளுடன் தலையணையின் கீழே வைத்துக் கொண்டு தூங்க அமைதியான தூக்கம் வரும். வாரம் இருமுறை மரிக்கொழுந்துகளை மாற்றி இதுபோல சில வாரங்கள் செய்து வர, மனநலப் பாதிப்புகளும் குணமாகி, அமைதியான உறக்கம் இயல்பாக வரும். மரிக்கொழுந்து இலைகளை அரைத்து விழுதாக்கிக் கொண்டு, அதில் ஒரு டம்ளர் தண்ணீர் கலந்து சற்று நேரம் ஊற வைக்கவும். பின்னர் அந் நீரை பருகிவர வயிற்றுவலி குணமாகும். உடல் தோலில் பூஞ்சைகள் தொற்றால் சருமக்கோளாறு உள்ளவர்கள் இந்த நீரை தினமும் பருகிவர, நச்சுத் தொற்றுக்களால்ஏற்பட்ட சருமப் பாதிப்புகள் விலகி விடும்.

இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தவும், உடலில் உள்ள கெட்ட கொழுப்பைக் குறைக்கவும் இது உதவுகிறது. தலைவலிக்கு ஒரு வாணலியில் (தாச்சியில்) நல்லெண்ணெய் விட்டு, அதில் மரிக்கொழுந்து அரைத்த விழுதையும், சிறிது வேர்க்கொம்புத் தூளையும் கலந்து ஆறவிட வேண்டும். பின்பு இதை எடுத்து நெற்றியில் பற்று போலத் தடவினால் தலைவலி குணமாகும்.

கை, கால் மூட்டுவலி இருப்பவர்களும் இந்த விழுதை பூசினால் வலி தணியும் அல்லது வாணலியில் சிறிது தேங்காய் எண்ணெயை ஊற்றி இந்த விழுதை அதில் கொட்டி, தைலம் போல வரும்வரை காய்ச்ச வேண்டும். பின்பு ஆறவிட்டு, பாதிப்புள்ள இடங்களில் தடவி வந்தால், சொரியாசிஸ் எனப்படும் தோல் வியாதிகளும் படிப்படியாகத் தணியும்.

செம்பட்டை முடிகள் கருமை நிறமாக வர மரிக்கொழுந்து இலைகளை நிலாவரை இலைகளுடன் கலந்து அரைத்து தலையில் தேய்த்து மசாஜ் செய்து வந்தால், செம்பட்டை நீங்கி, கருப்பு முடிகள் வளர ஆரம்பிக்கும். சருமத்தில் ஏற்படும் அரிப்பு, தொற்றுக்கள், ஊறல் போன்ற சகல நோய்களுக்கும் மரிக் கொழுந்து சிறந்த மூலிகையாகும்.

அத்துடன் சருமத்தில் ஏற்படும் பூஞ்சை தொற்றுக்களுக்கும் மருந்தாகிறது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய தேசங்களில் மரிக்கொழுந்து கேக் போன்ற பேக்கரி உணவுகளில் சுவையூட்டவும் நறுமணத்திற்காகவும் சேர்க்கப்படுகிறது. மேலும் சில நாடுகளில் புகையிலை, சிகரெட் எனும் புகைப்பான்களில் மண மூட்டியாக சேர்க்கப்படுகிறது. தலைமுடி உதிர்பவர்கள் மரிக்கொழுந்து இலைச் சாறும், தேங்காய் எண்ணெயும் சமஅளவு கலந்து காய்ச்சி வடித்து பயன்படுத்தினாலே முடி உதிர்வதை தடுக்கலாம்.

தினமும் தலைக்கு இவ் எண்ணெய் வைத்து மசாஜ் செய்து பூசி வரலாம். உங்கள் வீட்டுத்தோட்டங்களில் சாடிகளில் இச்செடியை வளர்க்கலாம். தூய்மைத் தன்மை பேணப்பட வேண்டும். அச்செடியிலிருந்து வெளியேறும் இரசாயன வாசனை சேர்வைகள் சூழலை மாசடையாமல் தூய்மைப்படுத்தும்.

எனவே எமக்கு சுவாசிப்பதற்கு தூய காற்றும் கிடைக்கக் கூடியதாக இருக்கும். இதன் இலைகளை கசக்கி முகர்வது அல்லது தண்ணீரில் கொதிக்க வைத்து ஆவி பிடிப்பது பல சுவாச நோய்களுக்கு அதாவது மூக்கடைப்பு, பீனிசம், ஆஸ்மா போன்ற நிலைகளை குறைக்கவல்லது. மரிக்கொழுந்தை விதைகள் மூலமாகவும், தண்டுப்பகுதிகள் மூலமாகவும் எளிதாக வளர்க்கலாம். செடி நன்கு வளர ஆரம்பித்ததும் மேல் நுனிக்கொழுந்துகளை அவ்வப்போது கிள்ளி விடுவது செடி புதர் போல் வளர உதவும். முக்கியமாக காற்றை தூய்மைப்படுத்தக்கூடிய நறுமணமுள்ள, நிறைந்த மருத்துவப் பண்புகளுடன் கூடிய வீட்டில் வளர்க்கக் கூடிய முக்கிய மூலிகை மரிக் கொழுந்தாகும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்


# இராசிபலன்

01.06.2026
வைகாசி 18, திங்கட்கிழமை
பிரதமை பிற்பகல் 4.27 மணிவரை

கேட்டை முன்னிரவு 7.08 மணிவரை
சுப நேரம் 11.52-1.22 மணிவரை
இராகுகாலம் 7.22-8.52 மணிவரை
வற்றாப்பளை கண்ணகியம்மை பொங்கல்

சந்திராஷ்டமம்:
பரணி, கார்த்திகை

வளவன்




**மேஷம்**
விரயங்கள் மேலோங்கும் நாள், தேவையற்ற விரயங்களைத் தவிர்ப்பது நல்லது, வேலைச் சுமை கூடும், யோசித்துச் செயற்பட வேண்டிய நாள், ரோக பயமுண்டு.



**ரிஷபம்**
உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.



**மிதுனம்**
பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உற்சாகத்துடன் பணி புரியும் சூழ்நிலை உருவாகலாம், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள்.




**கடகம்**
உறவினர் பகை மாறும், மற்றவர்களின் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கை கூடும், சந்தித்தவர்களின் சந்தோசம் கிடைக்கும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும்.



**சிம்மம்**
பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகள் வந்து சேரலாம், திருமண முயற்சிகள் கை கூடும்.



**கன்னி**
செல்வநிலை உயரும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், தன்னம்பிக்கை அதிகரிக்கும், போசன சுகமுண்டு.




**துலாம்**
புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், வங்கிச் சேமிப்பு உயரும் வாய்ப்புண்டு, தேவைகள் பூர்த்தியாகும், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள்.



**விருச்சிகம்**
வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், முன்னேற்றம் கூடும் நாள், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.



**தனுசு**
கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, செய்தொழிலில் மாற்றங்கள் ஏற்படலாம், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், சுபவிரயங்கள் அதிகரிக்கும் நாள்.



**மகரம்**
வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், திடீர் பணவரவால் சந்தோசமடைவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.



**கும்பம்**
வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், வியாபார விருத்தியுண்டு.



**மீனம்**
இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

உடைவதை விட வளைந்து கொடுப்பதே பாராட்டுக்குரியது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தரிசனம் 02 XV

## இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபலானமும்




(29.05.2026 தொடர்ச்சி)

நாஸ்திகம் என்பது கடவுள் இல்லை எனும் கொள்கையைக் குறிப்பதாகும்.

ஈ.வே.ரா.பெரியார், அறிஞர் அண்ணாத்துரை, கலைஞர் கருணாநிதி போன்றவர்கள் நாஸ்திகவாதிகள். அவர்கள் கடவுள் இல்லை என்ற நிலைப்பாட்டைக் கொண்டவர்கள். இதில் ஈ.வே.ரா பெரியார் கடவுள் மறுப்புக் கோட்பாட்டைக் கொண்டவர். நாஸ்திகம் என்பதற்கும் கடவுள் மறுப்புக் கொள்கை என்பதற்கும் ஏதேனும் வித்தியாசம்-வேறுபாடு உண்டா? என நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

இங்குதான் நாஸ்திகம் என்பது கடவுள் இல்லை என்ற நிலைப்பாட்டைக் கொண்டதாயினும் கடவுள் நம்பிக்கையுடைய ஆஸ்திக வாதிகளை இவர்கள் எதிர்ப்பதில்லை.

அதாவது கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கை கொண்டவர்களை எதிர்ப்பதும் அவர்களைத் தவிர்ப்பதும் நாஸ்திகத்திற்கு உடன்பாடன்று.

அந்த வகையில் கலைஞர் கருணாநிதி நாஸ்திகப் போக்கைக் கொண்டிருந்தார். கலைஞர் கருணாநிதி கலந்து கொண்ட ஒரு கூட்டத்தில் சூப்பர் ஸ்ரார் ரஜனிகாந் உரையாற்றும் போது, சிலருக்கு கடவுளில் விருப்பமில்லை. ஆனால் கடவுளுக்கு அவர்கள் மேல் விருப்பம் என்று கூற, அதனை அங்கிகரிப்பது போல, கலைஞர் கருணாநிதி சிரித்து மகிழ்ந்தார்.

ஆனால் பகுத்தறிவின் தந்தை ஈ.வே.ரா.பெரியார் நாஸ்திகம் என்பதைக் கடந்து, கடவுள் மறுப்புக் கொள்கையைக் கொண்டிருந்ததன் காரணமாக தமிழகம் முழுமையிலும் கடவுள் கோட்பாட்டிற்கும் ஆலய வழிபாடுகளுக்கும் எதிராகப் பிரசாரம் செய்தார்.

இங்கு பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டதாயினும் அவரின் கடவுள் மறுப்புப் போக்கை தமிழக மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்து ஆலயங்களும் அவற்றின் நிர்வாகங்களும் என்பதான இத் தரிசனம், எங்கள் ஈழ மண்ணில் இருக்கக்கூடிய இந்து ஆலயங்கள் மற்றும் அவற்றின் நிர்வாகங்கள் பற்றிச் சிலாகிப்பதை நோக்கமாகக் கொண்டது.

எனினும் எமது அண்டை நாடாகவும் ஞானபூமியாகவும் இருக்கக்கூடிய இந்திய தேசத்தில் குறிப்பாக தமிழகத்தில், இந்து சமயத்திற்கான அங்கிகாரம் குறித்து சில விடயங்களை முன்வைப்பது அவசியம் என்ற அடிப்படையிலேயே அவை பற்றி இவ்விடத்தில் பிரஸ்தாபிக்கின்றோம்.

இங்குதான் தமிழகத்தில் ஆட்சி செய்த மு.க.ஸ்ராலினை முதலமைச்சராகக் கொண்ட திமுக இந்து சமயத்திற்கு எதிராகச் செயற்பட்டது என்ற உண்மையை இங்கு கூறியாக வேண்டும்.

அதுதவிர, மு.க.ஸ்ராலின் அவரது மகன் உதயநிதி ஸ்ராலின் ஆகிய இருவரும் நாஸ்திகம் என்பதை வகைப்படுத்துகின்றனர்.

அதாவது, அவர்களைப் பொறுத்தவரை இந்து சமயத்தில் கடவுள் இல்லை என்பதுதான் அவர்களின் நாஸ்திகம். இதை இன்னும் தெளிவுபடுத்துவதாயின், கத்தோலிக்கம், இஸ்லாம் ஆகிய மதங்கள் கூறுகின்ற இறை கொள்கையை மு.க.ஸ்ராலினும் உதயநிதி ஸ்ராலினும் ஏற்றுக் கொள்கின்றனர். அதனாலே உதயநிதி ஸ்ராலின் தன்னை ஓர் கத்தோலிக்கராக அறிவித்தார்.

ஆம், நாஸ்திகம் என்பது கடவுள் இல்லை என்பது மட்டுமல்ல. நாஸ்திகர்களுக்கு மதங்களும் இருக்க முடியாது.

ஆக, நான் ஒரு கத்தோலிக்கன் எனக் கூறிய உதயநிதி ஸ்ராலின் இந்துமத எதிர்ப்பாளரேயன்றி, அவர் நாஸ்திகர் அல்ல என்பது நிரூபணமாகிறது.

இங்குதான் தமிழக மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக்குச் சமாதி கட்ட வேண்டும் என சபதம் எடுத்துக் கடந்த சட்ட சபைத் தேர்தலில் அதனை நிறைவேற்றிக் கொண்டனர்.

### நடிகர் விஜயின் தமிழக வெற்றிக் கழகம்

திராவிட முன்னேற்றக் கழகத்தை முறியடித்து ஆட்சியைக் கைப்பற்றுகின்ற திறன் அதிமுக உள்ளிட்ட எந்தக் கட்சிகளிடமும் இருக்கவில்லை. அந்தளவுக்கு தமிழகத்தின் அரசியல் கட்சிகள் கடும் பலவீனமுற்றிருந்தன.

இந்நிலையில் தமிழக வெற்றிக்கழகத்தை நடிகர் விஜய் ஆரம்பிக்கின்றார்.

நடிகர் விஜய் தமிழக வெற்றிக் கழகத்தை ஆரம்பித்த போது அதற்கு எதிராக எழுந்த பிரசாரம் சாதாரணமானதன்று.

அந்தப் பிரசாரங்களில் ஒன்றாக விஜய் என்ற பெயருக்கு முன்பாக ஜோசப் என்ற பெயர் சேர்க்கப்படுகிறது.

ஆம், திரையுலகில் தளபதி என அறியப்பட்ட நடிகர் விஜய் ஓர் இந்து என்றே பலரும் கருதியிருந்தனர்.

தந்தை சந்திரசேகர், தாய் சோபா, மனைவி சங்கீதா, மகன் சஞ்சய் என்ற பெயர்ப்பட்டியல் நடிகர் விஜயை இந்துவாகவே காட்டி நிற்கிறது.

தவிர, அவர் நடித்த திரைப்படங்கள் எதிலும் ஜோசப் என்ற பெயருக்கு இடமிருக்கவில்லை.

**புருசோத்தமன்**

(நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media


# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 5

காவியத் தொடர்

1055





கிழவனார் தம்முடைய உடம்பின் வலிமையை எண்ணித் தாமே ஆச்சரியப்பட்டார். அந்தப் பெரிய பாரத்தை இத்தனை நேரம் சுமந்தும் தம்முடைய உயிர் போகவில்லையென்பதை உணர்ந்து கொண்டார். ஆனால் இவ்வளவு கெட்டியான உயிரை இன்னமும் காப்பாற்றிக் கொள்ள முடியுமா?

ஆம் எப்படியாவது காப்பாற்றிக் கொண்டேயாக வேண்டும். காப்பாற்றிக் கொண்டு சோழ குலத்துக்கு நேரவிருந்த அபாயத்தைத் தடுக்க வேண்டும். அப்படித் தடுக்காவிட்டால் அவருடைய குலத்துக்கு என்றும் அழியாத பழி இவ்வுலகில் ஏற்படுவது நிச்சயம். வானுலகத்துக்குப் போனால் அங்கேயும் அவருடைய மூதாதையர்கள் அனைவரும் அவரைச் சபிப்பார்கள்.

ஆகையால், எந்தப்பாடு பட்டாலும் இந்த மரத்தையும் மண்டபத்தையும் அப்புறப்படுத்தி எழுந்திருக்க வேண்டும். ஐயோ! எத்தனை நேரம் இங்கே இப்படி நினைவு இழந்து கிடந்தோமோ என்னமோ தெரியவில்லையே? இதற்குள் ஒரு வேளை நாம் தடுக்க விரும்பும் விபரீதங்கள் நேரிட்டிருக்குமோ?

இதற்கிடையில் நரிகளின் ஊளைக் குரல் நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருந்தது. நரிகள் மூச்சு விடும் சத்தம் அவர் தலைக்கு அருகில் கேட்டது! ஆகா! இந்த நரிகளுக்குக் கூடவா பழுவேட்டரையனைக் கண்டு இளக்காரமாகப் போய்விட்டது? பார்க்கலாம் ஒரு கை! பழுவேட்டரையர் ஒரு கையினால் மட்டும் அல்ல, இரண்டு கைகளினாலும் பார்க்கத் தொடங்கினார். தம் உடம்பில் மிச்சமிருந்த பலம் முழுவதையும் பிரயோகித்து அவர்மீது விழுந்து கிடந்த மரத்தைத் தூக்க முயன்றார்.

மரம் சிறிது சிறிதாக உயர உயர, அதன் மேல் நின்ற மண்டபப் பாறை நகர்ந்து சரியத் தொடங்கியது. இடையிடையே அவர் செய்த ஹகாரங்கள் நெருங்கி வந்த நரிகளை அப்பால் நகரும்படி செய்தன.


ஒரு யுகம் எனத் தோன்றிய ஒரு நாழிகை முயன்ற பிறகு அவரை அமுக்கிக் கொண்டிருந்த மரமும் மண்டபப் பாறையும் சிறிது அப்பால் நகர்ந்து அவரை விடுதலை செய்தன. அந்த முயற்சியினால் அவருக்கு ஏற்பட்ட சிரமம் காரணமாகச் சிறிது நேரம் அப்படியே கிடந்தார். பெரிய நெடுமூச்சுகள் விட்டார். ஆகாசத்தை அண்ணாந்து பார்த்தார். மண்டபத்துக்குச் சமீபமாதலாலும், புயலில் மரங்கள் பல விழுந்து விட்டிருந்தபடியாலும் வானவெளி நன்றாகத் தெரிந்தது. இப்போது கருமேகங்கள் வானத்தை மறைத்திருக்கவில்லை. வைரப் பொரிகள் போன்ற எண்ணற்ற நட்சத்திரங்கள் தெரிந்தன. இலேசான மேகங்கள் அவற்றைச் சிறிது மறைத்தும் பின்னர் திறந்து விட்டும் அதிவேகமாகக் கலைந்து போய்க் கொண்டிருந்தன.

சட்டென்று வானத்தில் வடதிசையில் தோன்றிய ஒரு விசித்திரமான நட்சத்திரம் அவருடைய கவனத்தைக் கவர்ந்தது. அடடா! சில நாளைக்கு முன்பு அவ்வளவு நீளமான வாலைப் பெற்றிருந்த தூமகேதுவா இப்போது இவ்வளவு குறுகிப் போயிருக்கிறது?

(தொடரும்)

# பேராசிரியர் மா.சின்னத்தம்பியின் 'கல்வியியல் ஆய்வுமுறை'

## நூல் அறிமுகம்




பேராசிரியர் மா.சின்னத்தம்பி இலங்கை ஆசிரிய கல்வி வரலாற்றில் மிக முக்கியமான ஆளுமை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறையில் விரிவுரையாளராக பணி புரிந்த பேராசிரியர் அவர்கள் தனது தனித்துவமான கற்பித்தல் பாணியினால் தனது மாணவர்கள் மத்தியில் நன்மதிப்புப் பெற்றவர்.

அத்துடன் ஒரு பல்கலைக்கழக ஆசிரியருக்கு விதிக்கப்பட்ட கடமைகளுள் ஒன்றான அறிவுப் பரவலாக்கத்துக்கு அதிகம் பங்களிப்புச் செய்தவர். குறிப்பாக கல்வி முகாமைத்துவம், கல்விப் பொருளியல், சமகால கல்விப் போக்குகள், ஆசிரியர் கல்வி மற்றும் வாண்மைத்துவ விருத்தி போன்ற துறைகளில் அவர் எழுதிய நூல்கள் இன்றளவும் ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களிலும் கல்வியியல் ஆய்வுகளிலும் உசாத்துணைகளாகப் பயன் கொள்ளத்தக்க உள்ளடக்கப் பெறுமதி கொண்டவையாகவுள்ளன.

பேராசிரியர் அவர்கள் ஒரு தசாப்பதத்துக்கு முன்னர் பல்கலைக்கழக ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற போதும் இன்றுவரை தொடர்ச்சியாக கல்விப்புலத்தில் தன் சிந்தனைகளை விதைத்துக்கொண்டிருப்பது ஓயாது சிந்திக்கும், எழுதும் அவரது ஓர்மத்துக்கு எடுத்துக்காட்டு. அந்தவகையில் 2026 ஆம் ஆண்டு பேராசிரியர் மா.சின்னத்தம்பி எழுதி குமரன் புத்தக இல்லத்தின் வெளியீடாக வெளிவந்துள்ள நூல் கல்வியியல் ஆய்வுமுறை.

கல்வியியல் ஆய்வுமுறையின் பல் பக்கப் பரிமாணங்களையும் பொருத்தமான உதாரணங்களுடன் மிக எளிமையாக 275 பக்கங்களில் இந்நூல் விபரிக்கின்றது. கல்வியின் அதியுயர் செயற்பாடு என்பது "தெளிவற்ற விடயங்களிலிருந்து தெளிவுமிக்கவற்றைப் பிரித்தறிதல், பொய்யானவற்றிலிருந்து உண்மையானவற்றை வேறுபடுத்தல், முடிவுகளைக் காண காரண காரியத் தொடர்புகளின் அடிப்படையில் சிந்தனையை கூர்மையாக்கல்" என இந்நூலின் முன்னுரையில் பேராசிரியர் மா.சின்னத்தம்பி குறிப்பிட்டுள்ள விடயம் மிகுந்த கவனத்துக்குரியது. அதாவது கல்விப் புலத்தில் நாளுக்கு நாள் மேற்கிளம்பும் பல்வேறு சவால்கள் மற்றும் பிரச்சினைகளையும் விஞ்ஞானபூர்வமாக அணுகி அவற்றுக்கு, உள்ளவற்றுக்குள் பொருத்தமான சாத்தியமான தீர்வுகளை வழங்கும் பொறுப்பு கல்வியியல் ஆய்வாளர்களுக்குரியது.

இதனை நோக்கி நகர கல்வியியல் ஆய்வுகளின் செல்நெறிகள், தடங்கள் குறித்த தெளிவான அனுபவமும் அறிவும் ஒரு ஆய்வாளருக்குத் தேவைப்படுகிறது. பேராசிரியர் அவர்களின் விரிவுரைகள் எவ்வாறு விளக்கமிக்கவையாகவும் சிந்தனைக் கிளர்ச்சியை ஏற்படுத்துவனவாகவும் அமைகின்றனவோ அதனைப் போன்றே இந் நூலும் கற்கும் போது பல்வேறு சிந்தனைக் கிளர்ச்சிகளையும் ஆழச் சிந்திக்கும் பக்குவத்தையும் தூண் டுகின்றது.

எளிமையான உதாரணங்கள் மூலம் ஆய்வுச் செயன்முறை மற்றும் ஆய்வுப்பிரச்சினை குறித்து படிப்படியான விளக்கத்தை அளிக்கும் இந்நூல் ஆய்வுமுறையியல் தொடர்பில் அறிந்து கொள்ளவும் தனது அறிவை விரிவாக்கிக் கொள்ளவும் முனையும் ஒருவருக்கு மிகுந்த பயனுடையது.

கல்வித்துறைசார் ஆய்வுகளுக்குப் பொருத்தமான சில தலைப்புக்களை குறிப்பிட்டு அவற்றை அணுகும் விதம் குறித்து விபரிப்பது கற்போரின் ஆர்வத்தை மேலும் தூண்டும் நுட்பமாகும். நிறைவாக இலங்கைக் கல்வியியல் புலத்துக்கு அண்மித்த ஒரு பெறுமதியான வரவாக பேராசிரியர் மா.சின்னத்தம்பியின் கல்வியியல் ஆய்வுமுறை (2026) எனும் நூலை வலுவாக பரிந்துரைக்கமுடியும்.



தமிழ்மொழிமூலமான இவ்வாறான பெறுமதியான நூல்கள் பல்கலைக்கழக நூலகங்கள், கல்வியியல் கல்லூரி மற்றும் தேசிய கல்வியிய்ல் நிறுவகம் போன்ற ஆசிரியர் கல்வியுடன் தொடர்புற்ற தாபனங்களின் நூலகங்களிலும் தொடர்ச்சியாக கல்வியியல் ஆய்வுகளில் ஈடுபடும் மற்றும் கல்வியியல் ஆய்வு தொடர்பில் கற்பிக்கும் புலமையாளர்களின் கரங்களிலும் இருத்தல் அவசியமானதாகும்.

இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர்
கல்வியியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தகுதியற்றவன் தரங்கெட்ட செயலைத் தான் செய்வான்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் உயிரினும் மேலான யாழ்ப்பாண பொது நூலகம்

1981 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக்கப்பட்ட நாள்.

யாழ்ப்பாண மக்கள் தங்கள் உயிரை விடப் பெறுமதியாக மதித்த யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக்கப்பட்டு இன்று 45 ஆண்டுகளாகி விட்டன.

எனினும் யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்ட அந்த ரணம் இன்னமும் தமிழ் மக்களின் மனங்களில் இருந்து மாறவில்லை.

இந்த நாட்டில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சியில், மக்கள் சமூகம் வெறுக்கத்தக்க இச் செயல் நடந்தாகியதென்பது இங்கு சுட்டிக் காட்டப்படுவது அவசியம்.

ஏனெனில், முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன மிக உயர்ந்த அரசியல் இராஜதந்திரம் மிக்கவராக அறியப்பட்டவர். சுவடே சிறந்த கல்வியாளராகவும் அவர் இனங்காணப்படுகிறார்.

நிலைமை இதுவாக இருக்கையில், தென் கிழக்காசியாவின் முதன்மைக்குரிய நூலகமாக மதிக்கப்படும் யாழ்ப்பாணப் பொது நூலகத்தை எரித்துச் சாம்பலாக்குவதென்ற மனநிலை எப்பேற்பட்டதென்பதை ஒருகணம் நினைத்துப்பாருங்கள்.

ஆம், அப்போது மகாவலி அபிவிருத்தித் திட்ட அமைச்சராக இருந்த காமினி திசாநாயக்க யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து யாழ். பொது நூலகத்தை எரியூட்டியதாக நம் யாழ்ப்பாண மக்கள் இப்போதும் கூறுவர்.

அந்தோ! கொடுமை. கற்றறியாத கயவரும் முத்திநெறியறியாத மூக்கரும் செய்ய நினையாத ஒரு பெரும் பாதகத்தை கற்றறிந்த ஓர் அமைச்சர் யாழ்ப்பாண மண்ணில் தங்கியிருந்து, யாழ். பொது நூலகத்தை எரியூட்டினாரெனில், அதை எப்படி – என்னவென்று கூறுவது.

ஆம், யாழ்ப்பாண மக்களை அழிப்பதாக இருந்தால், அதற்கான ஒரேவழி யாழ்.பொது நூலகத்தை எரித்துவிட வேண்டும் என நினைத்த சிறுமைத்தனத்தின் விளைவே அதுவாகும்.

இந்த உலகம் இயங்கும் காலம் வரை சிங்கள சமூகத்தால் கழுவாய் தேட முடியாத குற்றமாக – பாவகாரியமாக யாழ். பொது நூலக எரிப்பு என்றும் இருக்கும்.

உண்மை. இந்த நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற அநுரகுமார திஸாநாயக்க பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில்; யாழ்ப்பாண மக்கள் யாழ். பொது நூலகத்தை வழிபடு கோயிலாக மதிக்கின்றனர். அவர்கள் நூலகத்திற்குள் பாதணிகள் அணிவதில்லை.

அத்தகைய பொது நூலகத்தை இனவாதத்தின் பெயரால், எரியூட்டியது எத்துணை கொடுமையானது எனக் கூறியதை யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டு இன்று 45 ஆண்டுகள் நிறைவடைகின்ற இவ் வேளையில் நினைத்துப் பார்க்கின்றோம்.

உண்மை. இன்னும் 25 ஆண்டுகள் கடக்கும் போது, யாழ். பொது நூலகத்தை எரியூட்டிய சிங்களத் தரப்புகள் இந்த நாட்டின் தேசத் துரோகிகள் என்பதாக சிங்கள சகோதரர்கள் பிரகடனம் செய்வர். இது நிச்சயம் நடந்தேயாகும்.

### பொலிஸாரின் அதிரடிக் கைதுகளால்

# டுபாயில் அஞ்ஞாதவாசமிருக்கும் குற்றக் கும்பல்கள் பேரச்சம்

டுபாயில் பதுங்கியிருக்கும் குற்றவாளிகளைக் கைது செய்வதற்காக அந்நாட்டுப் பொலிஸார் இரகசிய நடவடிக்கையைத் தொடங்கியுள்ள நிலையில் அந்த நாட்டில் பதுங்கியிருக்கும் இலங்கை பாதாள உலகக்குற்றவாளிகள் பீதியடைந்து அங்கிருந்து தப்பிச்செல்ல முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானுக்கு ஆதரவாகப் பல்வேறு செய்திக் கதைகளை உருவாக்கியது மற்றும் அரபு நாடுகள் மீதான தாக்குதல்களைப் படம்பிடித்து சமூக ஊடகங்களில் வெளியிட்டமை போன்ற குற்றச்சாட்டுகளில் இலங்கையர்கள் டுபாயில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்கள் மீது டுபாய் பொலிஸார் மிகவும் கடுமையான நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்குச் சொந்தமான தங்க நகைகள் மற்றும் பணம் உள்ளிட்ட அனைத்து மதிப்புமிக்க பொருட்களையும் டுபாய் பொலிஸார் கைப்பற்றி, அவர்களை நாடு கடத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாதாள உலகம் மற்றும் போதைப்பொருள் வலையமைப்புகளில் உள்ள பல சக்திவாய்ந்த நபர்கள் டுபாயில் பதுங்கியிருந்து, ஈரானிய போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் மாஃபியா குழுக்களுடன் இணைந்து போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளனர்.

ஈரானிய போதைப் பொருள் கடத்தல் கும்பல்களுடன் தொடர்புள்ள இலங்கைக் குற்றவாளிகள் குறித்த தகவல்களை டுபாய் பொலிஸார் தற்போது கண்டறிந்து, அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளனர்

இந்தத் தகவல்களின்படி ஷிரான் பாஷிக், ஆல்டோ தர்ம, ரான் மல்லி உள்ளிட்ட பல குற்றவாளிகள் தற்போது டுபாயில் பொலிஸ் காவலில் உள்ளனர். மேலும் இலங்கையில் பல்வேறு குற்றங்களில் ஈடுபட்டு டுபாயில் கைது செய்யப்பட்ட சுமார் ஐம்பது பேர் நாடு கடத்தப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பொலிஸாரும் டுபாய் உள்ளிட்ட வெளிநாடுகளில் பதுங்கியுள்ள குற்றக் கும்பல்களைக் கைது செய்ய சிவப்பு அறிவித்தல்களைப் பிறப்பித்துள்ளமை இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. (ந-7)

### அமுலுக்கு வந்தது

## அரச நிறுவனங்களுக்கான பிளாஸ்ரிக் போத்தல் தடை

அனைத்து அரச நிறுவனங்களிலும் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்ரிக் தண்ணீர் போத்தல்களை வாங்குவதற்கும் பயன்படுத்துவதற்கும் விதிக்கப்பட்ட தடை நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது.

பொது நிர்வாக அமைச்சகம் கடந்த 15 ஆம் திகதி சிறப்புச் சுற்றறிக்கை மூலம் அனைத்து அரச நிறுவனத் தலைவர்களுக்கும் இது குறித்துத் தெரிவித்துள்ளது.

சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் முழுமையான தலையீடு மற்றும் ஒப்புதலுடன் வெளியிடப்பட்ட இச் சுற்றறிக்கையின்படி, அரச நிறுவனங்களில் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்ரிக் பயன்பாட்டைத் தடுக்க நிறுவனத் தலைவர்கள் உடனடி நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

2025 ஆம் ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தில் உறுதியளித்தபடி, பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீனைக் குறைப்பதற்கான நடைமுறைத் திட்டம் அனைத்து அரச நிறுவனங்களிலும் தொடர்ந்து செயற்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## ரயில் மோதி பெண் உயிரிழப்பு

வெள்ளவத்தை ரயில் நிலையத்திற்கு அருகில் ரயில் மோதி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாணந்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண் வெள்ளையும் பழுப்பு நிறமும் கலந்த சேலை அணிந்திருந்ததாகவும் அவரிடம் பச்சை நிறப் பை ஒன்று இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனினும், அவரது அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

இறந்தவரின் சடலம் களுபோவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், வெள்ளவத்தை பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

### போதைவஸ்து கடத்திய

## சிறைக் காவலருக்கு ஆயுள் தண்டனை

ஹெரோயின்போதைப் பொருளைத் தன்வசம் வைத்திருந்த மற்றும் கடத்திய குற்றத்திற்காக முன்னாள் சிறைச்சாலைக் காவலர் ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப நபர் சிறைச்சாலைக் காவலராகப் பணியாற்றிய காலத்தில் 4 கிராம் மற்றும் 4 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளை சிறைச்சாலைக்குள் கடத்த முயன்ற நிலையில், சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து, அவர் பதவி இடைநீக்கம் செய்யப்பட்டதுடன் குற்றவாளிக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுகளின் பேரில் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நீண்ட வழக்கு விசாரணைகளின்பின் போதைப்பொருள் வைத்திருந்த மற்றும் கடத்திய குற்றச்சாட்டுகளில் குறித்த நபர் குற்றவாளி எனக் கண்டறியப்பட்டு, அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

மேலும், போதைப் பொருள் கடத்தல் தொடர்பான மற்றொரு குற்றச்சாட்டிற்காக, குற்றவாளிக்கு 7 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

### கடலில் மாயமான

## மாணவர்கள் மூவரும் நேற்று சடலமாக மீட்பு

ஹங்கம, களமெட்டிய கடலில் நேற்று முன்தினம் மாலை நீராடச் சென்றபோது அலையில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போன பாடசாலை மாணவர்கள் மூவரும் நேற்று(31) சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இத் துயரச் சம்பவத்தில் 12, 17 மற்றும் 18 வயதுடைய மூன்று மாணவர்களே உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த மாணவர்கள் ஹங்கம பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 26.05.2026 முதல் 13.06.2027 வரை



**நம்பிக்கையுடன் நடை போடும் கன்னி இராசி வாசகர்களே!**

உடல் பலத்தைவிட மனபலத்தை நம்பும் உங்களுக்கு, வெளி

காண்பீர்கள்.

எதிர்பாராத அதிர்ஷ்டமும், வருமானமும் வரும் நேரம் இது.

**வெற்றி தரும் குருபார்வை**

நவக்கிரகங்களில் சுப கிரகமான குரு பகவான், உங்கள் இராசிக்கு கேந்திராதிபத்ய தோஷம் பெற்றவர். அவர் பார்வை பலத்தால் 3, 5, 7 ஆகிய இடங்களை புனிதப்படுத்துகிறார்.

எனவே அந்த இடங்களுக்குரிய ஆதிபத்யங்கள் எல்லாம் மிக சிறப்பாக இருக்கும். தேக்கநிலை மாறும், தெளிவு பிறக்கும். ஊக்கமும், உற்சாகமும் உள்ளத்தில் குடி கொள்ளும். மூன்றாம் இடத்தை குருபார்ப்பதால் கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும்.

உடன் பிறப்புகளால் உதவி

சஞ்சரிக்கும் போது, குடும்ப முன்னேற்றம் திருப்திகரமாக இருக்கும். கொடுக்கல் வாங்கலில் இருந்த மந்த நிலை மாறும். தடைபட்ட காரியங்கள் தானாக நடைபெறும்.

ஆரோக்கிய தொல்லைகள் அகன்று உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உன்னத வாய்ப்பு தேடிவரும், நெருக்கடி நிலை மாறும், நினைத்தது நடக்கும்.

11.6.2026 முதல் 10.8.2026 வரை பூசம் நட்சத்திரக் காலில் சனி சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் போது, உங்கள் இராசிக்கு 5, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. அவரது சாரத்தில் குருபவனி வரும்போது பெற்ற பிள்ளைகளால் பெருமை சேரும்.

உற்ற நண்பர்கள் உறுது

பெற்ற கிரகம் 12 இல் வரும்போது யோகத்தை கொடுப்பார்.

விரயங்களை, சுப விரயமாக மாற்றுங்கள். இடமாற்றம் இனிமை தரும். வீடு மாற்றம் வேதனை தீர்க்கும். உத்தியோக மாற்றம் உற்சாகம் தரும்.

**ராகு -கேது பெயர்ச்சிக் காலம்**

13.11.2026 அன்று ராகு - கேதுக்களின் பெயர்ச்சி நிகழவிருக்கிறது. மகர ராகுவும், கடக கேதுவும் உங்களுக்கு மாற்றங்களை கொடுக்கப் போகிறார்கள். பஞ்சம ஸ்தானத்தில் ராகு சஞ்சரிக்கப்போவதால் நெஞ்சில் ஒரு பயம் ஏற்படும். நேசிக்கும் பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது.

# எதிர்காலம் பற்றிய பயம் அகலும்!

யுலகை சுற்றிப் பார்ப்பதில் விருப்பம் உண்டு. மனதில் உதிக்கும் கருத்துக்களை மறைக்காமல் எடுத்துரைப்பீர்கள். மற்ற மனிதர்களைப் போல் பிறந்தோம்! வாழ்ந்தோம்! என்றில்லாமல் ஏதாவது சாதனை செய்தோம்! என்றிருக்கவேண்டும் என்பதே உங்கள் கொள்கையாக இருக்கும்.

**குருப்பெயர்ச்சி**

உங்களுக்கு 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான், 26.5.2026 அன்று 11 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக லாபஸ்தானம் புனிதமடைகிறது. எனவே, வருமானம் திருப்திகரமாக இருக்கும். தொழிலில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். புதிய திட்டங்களை தீட்டி வெற்றி காண்பீர்கள். புனிதப் பயணங்களும், வெளிநாட்டு முயற்சியும் கைகூடும். குருகவசம் பாடி குருபகவானை வழிபட்டால் நல்லது நடக்கும்.

**குரு இருக்கும் இடத்தின் பலன்**

உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். அவர் 11 ஆம் இடத்தில் உச்சம் பெற்று சஞ்சரிக்கப்போகிறார். எனவே லாபஸ்தானம் புனிதமடைகிறது. குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சம்பாதிக்கும் வாய்ப்பு உண்டு. தொழிலில் கூடுதல் லாபம் கிடைக்கும்.

வெளிநாடு சென்று பணிபுரிய வேண்டுமென்று நினைத்தவர்களுக்கு, அந்தமுயற்சி கைகூடும். தற்காலிக பணியில் உள்ளவர்களுக்கு நிரந்தர பணி அமையும். பணி ஓய்வுக்கு பிறகும்கூட மீண்டும் வேலை கிடைத்து மகிழ்ச்சி

கிடைத்து மகிழ்வீர்கள். இடம் வாங்குவது, பூமி வாங்குவது போன்றவற்றில் கவனம் செலுத்தும் நேரம் இது. தடம் பதிக்கும் வாழ்க்கையும், தனவரவில் திருப்தியும் ஏற்படும்.

குருவின் பார்வை 5 ஆம் இடத்தில் பதிவதால் பூர்வ புண்ணிய ஸ்தானம் பலம் பெறுகிறது. பிள்ளைகள் வழியில் நல்ல தகவல் கிடைக்கும். படிப்பில் அக்கறை காட்டாதபிள்ளைகள் துடிப்போடு செயற்பட்டு மதிப்பெண் அதிகம் பெறுவர்.

விடுமுறை நாட்களிலும் நீங்கள் பணி செய்ததை முன்னிட்டு உத்தியோகத்தில் மேலதிகாரிகள் வேண்டிய சலுகைகளை கொடுப்பர். செய்தொழிலில் மேன்மை பெறும். பூர்வீக சொத்துக்களை பங்கு பிரித்துக் கொள்ள பொன்னான நேரம் இது.

7 ஆம் இடத்தை குருபகவான் பார்ப்பதால், வாழ்க்கை துணையை பற்றி அறிந்து கொள்ளும் இடம் புனிதமடைகிறது. எனவே கல்யாண கனவுகள் நனவாகும். கற்பனை செய்தவை அனைத்தும் நனவாகும்.

"வீட்டில் மங்கல ஓசை கேட்கவில்லையே" என்று கவலைப் பட்டவர்களுக்கு, இப்போது மங்கல ஓசையும், மழலையின் ஓசையும் கேட்கும். பெற்றோரின் மணிவிழா, முத்து விழாக்கள் நடைபெறும். அரசு தொடர்பான தகவல்கள் அனுகூலமாக இருக்கும். வெளி நாட்டில் பணிபுரிய நினைத்தவர்களுக்கு அதுவும் கைகூடும்.

**நட்சத்திர பாதசாரப்படி பலன்கள்**

26.5.2026 முதல் 10.6.2026 வரை புனர்பூச நட்சத்திரக் காலில் தன் சுயசாரத்தில் குருபகவான்

ணையாக இருப்பர். கற்ற கல்விக்கேற்ற வேலை கிடைக்கும். பொருளாதார நிலையில் உயர்வு ஏற்படும். பொதுநலத்தில் உள்ளவர்களுக்கு செல்வாக்கு அதிகரிக்கும், திடீர் முன்னேற்றம் திக்குமுக்காட வைக்கும், அதிகார யோகம் உண்டு.




11.8.2026 முதல் 19.10.2026 வரை மற்றும் 13.2.2027 முதல் 12.6.2027 வரை ஆயில்யம் நட்சத்திரக் காலில் புதன் சாரத்தில் குருபகவாள் சஞ்சரிக்கும் போது, அது உங்களுக்கு அற்புதமான நேரம் ஆகும். உங்கள் இராசிக்கும், 10 ஆம் இடத்திற்கும் அதிபதியானவர் புதன். அவரது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் போது தொழில் பெருகும். தொட்ட காரியம் வெற்றி அடையும். கூட்டாளிகளால் நன்மை கிடைக்கும். போட்ட முதலீடுகளை பெருக்குவீர்கள்.

புகழ், கௌரவம் கூடும். ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து உற்சாகம் தரும், வயல் வாங்குவது, வாகன மாற்றம் செய்வதற்கு உகந்த நேரம் இது. 20.10.2026 முதல் 12.2.2027 வரை மகம் நட்சத்திரக் காலில் குருபகவான் கேது சாரத்தில் சஞ்சரிக்கும் போது, சிம்ம குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிகிறது.

இப்பொழுது விரயஸ்தானத்தில் குரு சஞ்சரிக்கிறார். உங்கள் இராசிக்கு கேந்திராதிபத்ய தோஷம்

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

புதன்கிழமை தோறும் நின்ற கோலத்து பெருமாளை வழிபட்டு வாருங்கள். யோக பலம் பெற்ற நாளில் காரைக்குடி அருகிலுள்ள நேமம் ஜெயங்கொண்ட சோழீஸ்வரர், சவுந்தர நாயகியை வழி பட்டு பயமின்றி வாழ வழிவகுத்துக் கொள்ளுங்கள்.

**குருவின் வக்கிர காலம்**

கடகம் மற்றும் சிம்மம் ஆகிய இராசிகளில் குரு வக்ரம் பெறும் போது நல்ல சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். அசையா சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். மோதல்கள் அகலும். முன்னேற்றம் கூடும். வேதனைகள் விலகும். வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரும். கொடுத்த கடன்கள் வசூலாகும். தனித்தனியாக தம்பதியர் பணிபுரிந்து வந்தால் இப்போது ஒரே இடத்தில் வேலை பார்க்கும் வாய்ப்பு உண்டு.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக பண நெருக்கடி அகலும், பாராட்டும் புகழும் கூடும். மனதில் நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள். தம்பதியருக்குள் ஒற்றுமை பலப்படும் தாய் வழி ஆதரவு கிடைக்கும். இடம் வாங்கி வீடு கட்டுவீர்கள். எதிர் கால திட்டங்கள் நிறை வேறும். பிள்ளைகளால் பெருமை சேரும். உடல்நலத்தில் சிறுசிறு தொல்லைகள் வரலாம். உடன் பிறந்தவர்களால் நன்மை உண்டு. லாப குருவின் ஆதிக்கத்தால் மனக்கவலை மாறும். மகிழ்ச்சி கூடும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஒருவழிப்...

சந்தியிலிருந்து திருநெல்வேலி சந்தை பக்கமாகவுள்ள ஆடியபாத வீதியின் ஒரு பகுதி நாளை மறுதினம் புதன் கிழமை வரை ஒரு வழிப்பாதையாக மாற்றப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் மயூரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

எதிர்வரும் செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் திருநெல்வேலிச் சந்தியில் இருந்து திருநெல்வேலி சந்தைப் பக்கமாக வாகனங்கள் உட்செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன் வீதிப் புனரமைப்புப் பணிகளால் ஏற்படுகின்ற போக்குவரத்து நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, குறித்த வீதியிலுள்ள வியாபார நிலையங்கள் பகல் நேரங்களில் வாகனங்களில் இருந்து பொருட்களை இறக்குவதனைத் தவிர்த்து இரவு நேரங்களில் பொருட்களை இறக்குமாறும் கேட்கப்பட்டுள்ளதுடன்,

பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் குறித்த பணிகளுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்றுள்ளது. (ந-7)

## தையிட்டி...

துள்ளது.

வெசாக் தினத்தினை முன்னிட்டு, தையிட்டி விகாரையில் நேற்று முன் தினம் சனிக்கிழமை வழிபாடு நடைபெற்ற நிலையில் விகாரைக்கு சற்று தொலைவில் காணி உரிமையாளர்கள் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

இந்நிலையில் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் விகாரைக்குச் செல்வதாகக் கூறி விகாரைப் பகுதிக்குச் சென்று அங்கு சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடி புகைப்படங்களையும் எடுத்ததாகவும் அதனை அவதானித்த பொலிஸார் இருவரிடமும் விசாரணைகளை முன்னெடுத்தவேளை முன்னுக்குப் பின் முரணான தகவல்களை வழங்கியதை அடுத்து இருவரையும் கைது செய்து பலாலி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் பின்னர் இருவரையும் மல்லாகம் பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியவேளை நீதிவான் அவர்களை நிபந்தனையுடனான பிணையில் விடுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## மீனவர்களைத்...

ரைத்த அவர்,

குறித்த மீனவர்கள் தொடர்பில் இலங்கைக் கடற்படையினரின் உதவியுடனும் ராடார் (Radar) கருவிகளின் உதவியுடனும் இலங்கைக் கடல் எல்லைப் பகுதிகளில் தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இலங்கை எல்லைக் கடற்பரப்புகளில் மேற்கொண்ட தேடுதலில் குறித்த மீனவர்கள் எவரும் கண்டறியப்படாத நிலையில் இலங்கைக்கான இந்தியத் தூதரகம் ஊடாக இந்தியக் கடல் எல்லைப் பரப்புகளில் தேடுவதற்கான உதவியையும் அனுமதியையும் கேட்டுள்ளோம்.

அமைச்சு மட்டத்தில் மீனவர்களைத் தேடுவதற்கான அறிவுறுத்தல்கள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள நிலையில், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடலில் காற்றின் வேகம் அதிகமாகக் காணப்படுவதால், தேடுதல் பணிகள் தடைப்படாமல் இருப்பதற்குப் படையினரின் பூரண ஒத்துழைப்பு பெறப்பட்டுள்ளது.

காணாமல்போன மீனவர்களை எமது கடற்பரப்பிலும் சர்வதேச கடற்பரப்பிலும் தேடுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் இடம்பெற்று வரும் நிலையில், தனியார் படகுகள் மூலம் சர்வதேச கடல் எல்லைகளில் தேடுவதற்கான அனுமதிகளையும் வழங்கியுள்ளோம் என்றார். (ந-7)

## படகுச்சேவை...

லர் வனஜா செல்வரட்ணம் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் அனலைதீவில் இருந்து ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் இறங்குதுறைக்கு காலை 06.00 மணிக்கு முதலாவது படகுச் சேவையும் அதனைத் தொடர்ந்து காலை 07.10 மணி, காலை 08.00 மணி, காலை 09.00 மணி, நண்பகல் 12.00 மணி, பிற்பகல் 02.00 மணி ஆகிய நேரங்களில் படகுச்சேவை முறையே இடம்பெற்று மாலை 04.30 மணிக்கு இறுதிப் படகுச் சேவை இடம்பெறவுள்ளது.

அவ்வாறே கண்ணகை அம்மன் இறங்குதுறையில் இருந்து காலை 7.00 மணிக்கு அனலைதீவுக்கான முதலாவது படகுச்சேவை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து முறையே காலை 9.00 மணி, நண்பகல் 12.15 மணி, பிற்பகல் 2.30 மணி, பிற்பகல் 3.45, மாலை 4.45 ஆகிய நேர பிரமாணங்களில் படகுச் சேவை இடம்பெற்று அனலைதீவுக்கான இறுதிப் படகுச்சேவை மாலை 5.20 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அவ்வாறே எழுவைதீவுக்குமான படகுச்சேவை நேரங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் எழுவைதீவில் இருந்து ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் இறங்குதுறைக்கு காலை 6.15 மணிக்கு முதலாவது படகுச்சேவை இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து காலை 7.20, காலை 9.00 மணி, காலை 11.45, பிற்பகல் 2.20 ஆகிய நேரங்களில் படகுச்சேவை இடம்பெற்று இறுதிப் படகுச்சேவை மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இவ்வாறே கண்ணகை அம்மன் இறங்குதுறையிலிருந்து எழுவைதீவுக்கான படகுச்சேவையானது காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து காலை 9.00 மணி, நண்பகல் 12.15, பிற்பகல் 2.30 மணி, பிற்பகல் 3.45 ஆகிய நேரங்களில் படகுச்சேவை முன்னெடுக்கப்பட்டு மாலை 5.20 மணிக்கு இறுதிப் படகுச்சேவை இடம்பெறும். (ந-7)

## நீடிக்கப்பட்ட...

என அறிவிக்கப்பட்டுள்ளது.

பலாலி வீதியில் சுமார் 2.5 கிலோமீற்றர் நீளமான வீதி உயர் பாதுகாப்பு வலயத்தின் ஊடாகச் செல்கிறது. குறித்த பகுதியை கடந்த ஆண்டு நேரக் கட்டுப்பாட்டுடன் இராணுவத்தினர் போக்குவரத்திற்கு அனுமதித்தனர்.

இந்நிலையில் வடமாகாண ஆளுநர் செயலகத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற காணி விடுவிப்பு தொடர்பிலான விசேட கலந்துரையாடலின் போது, குறித்த வீதியினை 24 மணிநேர போக்குவரத்திற்கு அனுமதிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் கோரிக்கையை முன்வைத்த போதிலும் அதனை மறுத்த இராணுவத்தினர் மேலும் ஒரு மணி நேரம் வீதியை திறந்து விட சம்மதித்தனர்.

அதன் அடிப்படையில் இதுவரை காலமும் காலை 06 மணி முதல் இரவு 7 மணி வரையில் திறந்து விடப்பட்ட வீதியினை ஒரு மணி நேரம் நீடித்து இரவு 8 மணி வரையில் போக்குவரத்து செய்ய இராணுவத்தினர் அனுமதித்துள்ளனர்.

இந்நிலையில் வெசாக் தினம் முதல் பலாலி வீதி ஊடான போக்குவரத்திற்கு இராணுவத்தினர் மேலும் ஒரு மணி நேரத்தை நீடித்துள்ளனர்.

அதன் அடிப்படையில் தற்போது பலாலி வீதி ஊடாக காலை 06 மணி முதல் இரவு 09 மணி வரையில் பயணிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-7,33)

## நாட்டின்...

அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் நாட்டின் தற்போதைய நிதி நிலைமை குறித்து கருத்து வெளியிட்ட போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கருத்துரைக்கையில்,

இலங்கை ரூபாயை வலுப்படுத்துவதே எனது பொருளாதாரக் கொள்கையின் முதன்மையான நோக்கமாக இருந்தது. ஆனால் தற்போதைய ஆட்சியாளர்களின் தொலைநோக்கற்ற கொள்கைகளால் நாடு மீண்டும் பாரிய பொருளாதார ஆபத்தை நோக்கி நகர்கிறது.

அரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே டொலரின் மதிப்பை 280 ரூபா மட்டத்தில் தக்கவைப்பதற்கான முயற்சிகளை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை. இன்று டொலர் 320 ரூபா வரை சென்றுவிட்டது. அதாவது 30 ரூபாவால் அதிகரித்துள்ளது. இப்போது இதனை எவ்வாறு முன்னோக்கிக் கொண்டு செல்வது என்று தெரியாமல் திண்டாடுகிறார்கள்.

வெளிநாட்டு நாணயக் கையிருப்புப் பற்றாக்குறை என்பது ஒரு நாட்டிற்கு ஏற்படும் மிகப்பெரிய வருமானப் பற்றாக்குறையாகும். இந்தப் பிரச்சினைக்கு மிக விரைவாகத் தீர்வு காணாவிட்டால் நாடு பேரழிவைச் சந்திக்கும்.

இப் பிரச்சினையானது, கடுமையான நோயால் பாதிக்கப்பட்ட ஒரு மனிதனுக்குக் கால் உடைந்ததைப் போன்றது. அவன் நடந்து மருத்துவமனைக்குச் செல்வதற்காக நான் அவனது உடைந்த காலைக் குணப்படுத்திக் கொடுத்தேன். மருத்துவமனைக்குச் சென்ற பின்னர், 2024 ஆம் ஆண்டிற்குப் பிறகு அவனுக்கு அறுவை சிகிச்சை செய்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை.

இப்போது என்ன செய்ய முடியும். தடுக்கப்பட்ட இலங்கை - இந்திய திட்டங்களினால் நாட்டிற்கு 5 டிரில்லியன் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது. நான் ஆட்சியில் இருந்தபோது இலங்கையை உலகப் பொருளாதாரத்துடன் இணைக்க எடுத்த தொலைநோக்கு முயற்சிகள் உள்நாட்டு எதிர்ப்புகளால் முறியடிக்கப்பட்டன.

இந்தியாவுடன் இணைந்து சேது சமுத்திரம் திட்டத்தையும், இரு நாடுகளுக்கும் இடையிலான பாலத்தையும் அமைக்க முயற்சித்தேன். ஆனால் இவை யாருடைய எதிர்ப்புகளினால் நிறுத்தப்பட்டன? அந்தத் திட்டங்கள் மட்டும் தொடங்கப்பட்டிருந்தால் சுமார் பத்து வருடங்களுக்கு நாட்டில் கட்டுமானப் பணிகள் தொடர்ச்சியாக நடந்திருக்கும். அதன் மூலம் 5 டிரில்லியன் ரூபா பெறுமதியான பொருளாதாரம் நமது நாட்டுடன் இணைந்திருக்கும்.

அதேபோல் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு எரிபொருள் குழாய் இணைப்பை ஏற்படுத்துவதற்கும் திட்டமிட்டிருந்தேன். அதற்கு இடம் கொடுத்தார்களா? இல்லை. போலி காரணங்களைக் கூறி எதிர்த்தனர். அதைச் செய்திருந்தால், இந்தியாவுக்குக் கிடைக்கின்ற அதே குறைந்த விலையில் எரிபொருளை நாமும் தங்கு தடையின்றி பெற்றிருக்க முடியும்.

தற்போதைய ஆட்சியாளர்கள் வங்கிகளுக்குக் கடுமையான அழுத்தங்களைக் கொடுத்துள்ளனர். டொலரின் மதிப்பை 330 ரூபாவிற்கு மேல் அதிகரிக்கக் கூடாது என அவர்கள் உத்தரவிட்டுள்ளனர். விரைவில் 1 பில்லியன் டொலர்நாட்டுக்கு வரவுள்ளதாகக்கூறியே இந்தத் தற்காலிக அழுத்தத்தைப் பிரயோகிக்கிறார்கள். ஆனால், 1 பில்லியன் டொலர் வந்தாலும் சந்தையில் பெரிய மாற்றம் எதுவும் நடந்துவிடாது. இன்று உலகப் பொருளாதாரம் மாறிவிட்டது.

யுத்தம் காரணமாக சர்வதேச சந்தை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அந்தச் சவாலான சந்தையைத்தான் நாமும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இன்று இந்தியாவிற்கே பொருளாதாரத்தை நகர்த்துவது கடினமாக உள்ளது. சர்வதேச சந்தையில் திடீரென கச்சா எண்ணெய் விலை 10 டொலரால் உயர்கிறது.

இத்தகைய சூழ்நிலையில், இவர்கள் முழு மூச்சாக டொலரைக் கட்டுப்படுத்தப் பார்க்கிறார்கள். ஆனால் அதைச் செயற்கையாகச் செய்ய முடியாது. இன்னும் சில காலம் சென்றதும் டொலரின் மதிப்பு மீண்டும் வேகமாக உயரும் என ரணில் விக்கிரமசிங்க மேலும் சுட்டிக்காட்டினார். (ந-7)

## அகழ்வுப்...

ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி ஆரம்பமான நிலையில் கடந்த மே மாதம் 09ஆம் திகதி சனிக்கிழமை வரையில் 12 நாட்கள் அகழ்வுப் பணிகள் தொடர்ச்சியாக நடைபெற்றன.

இந்நிலையில் 09ஆம் திகதியுடன் அகழ்வு பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு இன்று ஜூலை முதலாம் திகதி மீண்டும் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

12 நாட்களாக நடைபெற்ற மூன்றாம் கட்ட அகழ்வுப்பணிகளின் போது, 21 என்புக் கூட்டுத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு, அவை அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் புதைகுழிக்குள் இருந்து மூக்குத்தி, நாணயக் குற்றிகள், ஆணிகள், மஞ்சள் நிற வளையல் துண்டு உள்ளடங்கலாக 17 பிற பொருட்கள் மீட்கப்பட்டு அவை நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை செம்மணி புதைகுழிக்குள் இருந்து இதுவரையிலான காலப்பகுதியில் 261 மனித என்புக் கூட்டுத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவை அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமக்கு நெருக்கமான வணிகக்குழுக்களுக்கு சாதகமான முடிவுகளையே அரசு எடுக்கிறது!

## இதனால் ஏழை மக்களுக்குப் பெரும் பாதிப்பு – நாமல் குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாட்டு மக்களுக்கு சேவை செய்வதை விடுத்து, தமக்கு அரசியல் ரீதியாக நெருக்கமான ஒரு சில வணிகக் குழுக்களுக்குச் சாதகமாகவே தற்போதைய அரசாங்கம் தொடர்ந்து முடிவுகளை எடுத்து வருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டியவில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இந்த அரசாங்கம் எடுக்கும் தவறான முடிவுகளின் காரணமாக வரி அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவு உயர்வு, மின்சாரம் மற்றும் எரிபொருள் விலை உயர்வு ஆகியவற்றின் மூலமும் உள்நாட்டுத் தொழில் துறைகள் மற்றும் வாழ்வாதாரங்களின் வீழ்ச்சி மூலம் சாதாரண மக்கள் மீது வாழ்க்கைச் சுமை சுமத்தப்பட்டுள்ளது.

விவசாயிகள், தொழிலாளர்கள், சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோர் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் எதிர்கொள்ளும் போராட்டங்களைப் புறந்தள்ளிவிட்டு, தனது நலன்களுடன் இணைந்த ஒரு சில வணிகர்களைப் பாதுகாப்பதையே அரசாங்கம் தேர்ந்தெடுத்துள்ளது.

அரசாங்கம் மக்களுடன் நிற்கவில்லை. அது ஆட்சியில் இருப்பவர்களுக்கு நெருக்கமான ஒரு சில வணிகர்களுடனேயே நிற்கிறது. அவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் எடுக்கப்படும் ஒவ்வொரு முடிவும் இறுதியில் பொதுமக்கள் சுமக்கும் சுமையாக மாறுகிறது.

தொழிற்சாலைகள் மூடப்பட்டு வரும் வேளையில், ஊழியர்களைப் பாதுகாப்பது குறித்தோ, வேலை வாய்ப்புகளைப் பாதுகாப்பது குறித்தோ அரசாங்கம் மௌனம் காக்கின்றது. தொழில்துறை மற்றும் முதலீட்டிற்கு நிலையான சூழலை உருவாக்குவதற்குப் பதிலாக தொடர்ந்து பொதுமக்கள் மீதான நிதிச் சுமையை அதிகரித்து வருகிறது.

வலுசக்தி கொள்முதல் மற்றும் பொது விலைமுறிக் கோடல்களை கையாண்ட விதம் சமூகத்தில் கடுமையான விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது. தரம் குறைந்த இறக்குமதிகள் மற்றும் முறையற்ற நிர்வாகத்தால் ஏற்படும் நட்டங்கள், இறுதியில் அதிக செலவுகள் மற்றும் வரிகள் மூலம் மக்கள் மீதே சுமத்தப்படுகிறது.

கட்டமைப்பிற்குள் இருக்கும் தோல்விகளுக்கும் ஊழல்களுக்கும் மக்கள் பணம் செலுத்த வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

விவசாய சமூகத்துக்கு நிவாரணமும் பாதுகாப்பும் வழங்குவதாக உறுதியளித்து ஆட்சிக்கு வந்த போதிலும், உள்ளூர் விவசாயிகளுக்கு ஆதரவளிக்க அரசாங்கம் தவறிவிட்டது. உர விலையின் கடுமையான உயர்வையும், உற்பத்திச் செலவிற்கும் விவசாயிகளுக்குக் கிடைக்கும் சந்தை வருவாய்க்கும் இடையே பாரிய இடைவெளி காணப்படுகிறது.

முதலீடுகளை ஈர்ப்பது, வேலை வாய்ப்புகளை உருவாக்குவது, உள்ளூர் உற்பத்திகளை ஆதரிப்பது மற்றும் இளைய தலைமுறையினருக்குத் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் துறைகளை அறிமுகப்படுத்துவது ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஒரு நடைமுறைப் பொருளாதார மீட்புத் திட்டம் இலங்கைக்கு அவசரமாகத் தேவைப்படுகிறது.

அரசியல் அச்சுறுத்தல்கள் மற்றும் தவறான பிரசாரங்களை விடுத்து, மக்கள் நலக் கொள்கைகளைக் கடைப்பிடிக்குமாறும் மக்கள் மீதான சுமையைக் குறைத்து, பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் ஆட்சியைச் செய்யுமாறும் அரசாங்கத்துக்கு அழைப்புவிடுக்கின்றோம் என்றார். (ந-7)

### கொழும்பு தேசிய வைத்தியசாலையில்

# நரம்பியல் பிரிவு இன்று திறந்து வைப்பு

(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நரம்பியல் பிரிவு 99 மில்லியன் ரூபாய் செலவில் முழுமையாக நவீனமயமாக்கப்பட்டு, இன்று உத்தியோகபூர்வ மாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இன்று காலை 10.00 மணிக்கு நரம்பியல் நிறுவன வளாகத்தில் நடைபெறவுள்ள இந்தத் திறப்புவிழா நிகழ்வு சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் தலைமையில் நடைபெறவுள்ளதுடன், இதில் சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனியும் கலந்து கொள்ளவுள்ளார்.

மூளை, தண்டுவடம், நரம்பு மண்டலம் மற்றும் தசைத்தொகுதி தொடர்பான கோளாறுகளால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கான விசேட நரம்பியல் சிகிச்சைகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த நவீனமயமாக்கல் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ் உட்கட்டமைப்பு மேம்பாடுகள் மூலம் இலங்கையின் நரம்பியல் சிகிச்சைச் சேவைகளின் தரம் மற்றும் செயற்திறன் கணிசமாக அதிகரிக்கும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 62 மற்றும் 63ஆம் இலக்க விடுதிகளை உள்ளடக்கிய, நரம்பியல் பிரிவின் புதுப்பிக்கப்பட்ட விடுதிகள் வளாகமும் மக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படவுள்ளது.

இது ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித்தனி விடுதிகளைக் கொண்டுள்ளதுடன், ஒவ்வொன்றும் 22 படுக்கை வசதிகளைக் கொண்டுள்ளன.

இத் திறப்புவிழாவின் ஒரு பகுதியாக, இலங்கையின் நரம்பியல்துறைக்கு ஆற்றிய பங்களிப்பைப் பாராட்டும் வகையில், நரம்பியல் நிறுவனத்தின் நிறுவுநர் "தேஷமான்ய வித்யா ஜோதி" ஜே.பி.பீரிஸின் உருவப்படமும் திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)


## துயர் பகிர்கிறோம்

வணிகப்பிரிவு வணிகக்கல்வி ஆசிரியர்
திருமதி சிவதர்சினி பாலகிருஸ்ணன்
அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி துரையப்பா விசாலாட்சி**

தோற்றம் 27.10.1942
மறைவு 30.05.2026



அவர்கள் கொழும்பில் அகால மரணமடைந்துவிட்டார்.
அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆழ்ந்த துயரத்துடன் :
அதிபர் மற்றும் ஆசிரியர் வட்டம்,
யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
077 907 3735, 077 208 324
(2379)

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்


21 வயதில் இருந்து 40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம்
A/L அல்லது அதற்கு சமமான கல்வி தகுதிகள் எதிர்பார்க்கின்றோம்
சம்பளம் 30,000/- இலிருந்து 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை


(C-5759)

V2 TRAVELS
v2vacancies@gmail.com
076 1410725
0777 068 777

## ஓவ்செற் அச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு



நல்ல நிலையில் உள்ள ஓவ்செற் அச்சு இயந்திரங்கள் இரண்டு
(KORD, KORA)
யாழில் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :
075 719 0110



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5760)
076 825 7716 (ஆகாஸ்)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media